விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆவணி 19 சனிக்கிழமை (04.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 259

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றத் தீர்மானித்துள்ளது.

குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணை யோசனைத் திட்டம் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிடம் ஏற்கனவே ஒப்படைக்கப்பட்டுள்ளது. வெளிவிவகார அமைச்சர் சர்வதேச விவகாரங்களை உரிய முறையில் கையாளத் தவறியுள்ளதாகக் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கையொப்பமிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரவி (18 ஆம் பக்கம் பார்க்க)

## இராசபாதையில் விபத்து இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் இராசபாதையில் நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவில் உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளிலும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார். மற்றுமொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்தில் அனலைதீவைச் சேர்ந்த குமரேஸ் நிர்மலன் (வயது-25) என்ற இளைஞனே உயிரிழந்தவர் ஆவார்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, நீர்வேலிப் பகுதியிலிருந்து கற்களை ஏற்றிக் கொண்டு யாழ்.நோக்கி வந்து கொண்டிருந்த உழவு இயந்திரத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து அச்சுவேலி (18 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் அமைப்புத் திருத்தம் குறித்து கூட்டமைப்பு திங்களன்று ஆராயும்

## மாவை. எம்.பி. விளக்கம்

(கொழும்பு)

உத்தேச அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு ஆதரவு வழங்குவதா? இல்லையா? என்பது குறித்து எதிர்வரும் ஆறாம் திகதி கூடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா தெரிவித்துள்ளார். (18 ஆம் பக்கம் பார்க்க)




நல்லூரானின் கைலாச வாகனத் திருவிழாக் காட்சி

## இலங்கை வருகிறார் இந்தியத் தளபதி


(கொழும்பு)

இந்திய இராணுவத் தலைமைத் தளபதி வி.கே.சிங் ஐந்து நாள் பயணமாக நாளை இலங்கைக்குப் பயணம் மேற்கொள்கின்றார். இந்தப் பயணத்தின்போது பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரிய மற்றும் முக்கிய அதிகாரிகளை அவர் சந்திப்பார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதல் திட்டமான ஆப்ரேஷன் பவன் என்ற திட்டத்தை வகுத்துக் கொடுத்து அதற்காக யுத் சேனா பதக்கம் பெற்றவரே வி.கே. சிங் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளியுறவுச் செயலர் நிருபமா ராவ் 4 நாள் பயணமாக (18 ஆம் பக்கம் பார்க்க)

## நடைமுறைச் சாத்தியமானதையே தமிழ் மக்கள் கோரி நிற்கின்றனர்



### அமைச்சர் டக்ளஸ் சாட்சியம்

(கொழும்பு)

தமிழ் மக்கள் சூரியனையோ, சந்திரனையோ கேட்கவில்லை. நடைமுறைச் சாத்தியமான விடயங்களையே கோருகின்றனர் என்று படிப்பினைகள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவின் முன்பாக சாட்சியமளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார்.

நேற்றுப் பல மணி நேரம் ஆணைக்குழுவின் முன்னதாகச் சாட்சியமளித்த அவர், இலங்கையர் என்பதற்காகத் தமிழர் என்பதையோ அல்லது தமிழர் என்பதற்காக இலங்கையர் என்பதையோ விட்டுக்கொடுக்கத் தாம் தயாராகவில்லை என்றும் ஆணைக் குழுவிடம் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்.

அவர் தனது சாட்சியத்தின்போது முக்கியமாகத் தெரிவித்தவை வருமாறு,

இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் இன்று இருவேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றார்கள். (02 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் அமைப்புத் திருத்தத்துக்கு எதிராகச் செயற்படத் தீர்மானம்!

### ஜே.வி.பி. அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் புதிய அரசியல் அமைப்புத் திருத்தங்களுக்கு எதிராக நிபந்தனையின்றி செயற்படப் போவதாக ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்தத் தார்மீக விரோத அரசியல் அமைப்புத் திருத்தத்திற்கு எதிராக நீதிமன்றத்திற்குச் சென்ற ஒரே அரசியல் கட்சி ஜே.வி.பி. மாத்திரமே எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் அமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெறக் கூடிய சூழலை ஐக்கிய தேசியக் கட்சியே ஏற்படுத்தியது எனவும் ரில்வின் சில்வா குற்றஞ்சுமத்தியுள்ளார்.

கொழும்பில் (18 ஆம் பக்கம் பார்க்க)

## புகலிடம் நிராகரிக்கப்படும் இலங்கையருக்குப் பேராபத்து

### மன்னிப்புச் சபை அறிக்கை


(கொழும்பு)

அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படும் இலங்கையர்கள் அங்கு அரசு தரப்பினரால் சித்திரவதை செய்யப்படுகின்றார்கள் என்று சர்வதேச மன்னிப்புச் சபை வெளிப்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் இருந்து பலாத்காரமாகக் கடந்த வருடம் இவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டிருந்த மூவர் சிறையில் அடைக்கப்பட்டு இருக்கின்றார்கள் என்றும் சித்திரவதை செய்யப்பட்டு இருக்கின்றார்கள் என்றும் சபை நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

சுமித் மெண்டிஸ், லசந்த விஜயரட்ண, இந்திக்கா ஆகிய மூவருமே சிறைச்சாலைக் காவலர்களாலும் (18 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


யாழ். பல்கலைக்கழக நுண்கலை பீடத்துக்குச் சென்ற சீர்காழி ஜி.சிவசிதம்பரத்தை வரவேற்கும் நிகழ்வில் நுண்கலை துறைத் தலைவர் ந.வி.மு. நவ ரட்ணம் உரையாற்றுவதையும் சீர்காழி ஜி.சிவசிதம்பரம் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட நுண்கலை பீட மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# அரசியல் அமைப்புத் திருத்தம் நாட்டை ஆபத்துக்குள் தள்ளும்

## புத்திஜீவிகள் ஒன்றியம் எச்சரிக்கை

(கொழும்பு)

உத்தேச 18ஆவது அரசியலமைப்புத் திருத்தமானது நாட்டின் ஜனநாயகத்தை பாரதூரமான ஆபத்தில் தள்ளும் நடவடிக்கை எனவும் நாட்டை சர்வாதிகார நிர்வாகத்திற்குள் உட்படுத்தும் ஆபத்து இருப்பதாகவும் மனித உரிமைகள் தொடர்பான புத்திஜீவிகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

உத்தேச அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் நாட்டில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக 17ஆவது அரசியலமைப்பின் ஊடாக ஏற்படுத்தப்பட்ட அரசியலமைப்பு பேரவை இல்லாதொழிக்கப்பட உள்ளதுடன் அதன் அதிகாரங்கள் ஜனாதிபதி தலைமையிலான குழுவிடம் வரையறுக்கப்படவுள்ளன.

குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைப்பதானது 17ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் அடிப்படை நோக்கத்தை மீறுவதாகும்.

அத்துடன் புதிய அரசியலமைப்புத் திருத்தத்தின்படி சுயாதீன ஆணைக்குழுக்கள் ஆளும் கட்சியின் அதிகாரத்தின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன.

அதீதமான அதிகாரங்களை கொண்டுள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவரின் கீழ் செயற்படும் அமைச்சரவை என்பது பொம்மைகளை போன்ற அமைச்சர்களை கொண்ட ஒரு நிறுவனம் என்பது இரகசியமான விடயமல்ல. தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியில் இந்த நிலைமை தெட்டத் தெளிவாக புலப்படுகிறது.

இந்த நிலையில் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் பொலிஸ் மற்றும் அரச சேவை ஆணைக்குழுக்களின் அதிகாரங்கள் ஜனாதிபதியின் கைகளுக்கே செல்லும்.

இந்த நிலைமையானது மக்களின் உரிமைகளை சவாலுக்கு உட்படுத்தியுள்ளது. சுயாதீனமான பொலிஸ் மற்றும் அரச சேவைகள் இல்லாத இந்த நாட்டில் சுதந்திரம் மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்த முடியாது.

அண்மை காலத்தில் நடத்தப்பட்ட அனைத்து தேர்தல்களும் மோசடியானதும், நீதியற்றதுமான தேர்தல்களாகும். அவற்றில் மக்களின் உண்மையாக நிலைப்பாடுகள் பிரதிபலிக்கவில்லை.

17ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை அமுல்படுத்தாது அரசாங்கம் மேற்கொள்ள போகும் அரசியலமைப்புத் திருத்தங்களால் நிலைமை மேலும் மோசமடையும்.

அத்துடன் மக்களின் வாக்குரிமைகளும் மீறப்படும் தனி நபர் ஒருவரின் அதிகார தேவைகளுக்காக கொண்டு வரப்படும் அரசியலமைப்புத் திருத்தங்களை ஜனநாயகத்தை மதிக்கும் சகல மக்களும் கண்டிக்க வேண்டும்.

இவ்வாறான குறுகிய நோக்கம் கொண்ட அரசியல் திருத்தங்களை ஏற்படுத்துவதற்காக நாட்டுமக்கள் கூடந்த தேர்தல்களில் அதிகாரத்தை வழங்கவில்லை எனவும் மனித உரிமைகள் தொடர்பான புத்திஜீவிகளின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ச-5)

## பஸ்-வான்-ஆட்டோ மோதி விபத்து

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு முன்பாக ஹயஸ், ஆட்டோ மற்றும் தென்னிலங்கை பயணிகளுடன்வந்த பஸ் ஆகியன மோதிக் கொண்டதில் ஆட்டோச் சாரதி படுகாயமடைந்தார்.

நேற்றுக்காலை 10.45 மணியளவில் இவ் விபத்துச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னாகம் நோக்கி சென்றுகொண்டிருந்த பஸ் மற்றும் ஹயஸ் வான் என்பவற்றடன் ஆட்டோ மோதுண்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் ஆட்டோ சாரதி படுகாயமடைந்து போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச)

## சீரான மணல் விநியோகத்தை குழப்புவதற்கு விசமிகள் முயற்சி

### மகேஸ்வரி நிதிய இணைப்பாளர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் மணலுக்கு நிலவி வந்த தட்டுப்பாடானது சீரடைந்துள்ள நிலையில் மீண்டும் மணல் விநியோகத்தினை சீர்குலைக்கும் செயற்பாட்டில் சில விசமிகள் ஈடுபட்டு வருகின்றனர் என மகேஸ்வரி நிதியத்தின் செயற்திட்ட இணைப்பாளர் த.றஜீவ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, கடந்த வாரம் பெய்த கடும் மழை காரணமாக சில தினங்கள் மணல் ஏற்ற முடியாமல் போனதை தமக்குசாதகமாகபயன்படுத்திக் கொண்ட சில விசமிகள் மணல் விநியோகத்தில் குழப்பங்களை உண்டுபன்ன முனைப்புக்காட்டினர்.

அதன் ஒரு செயற்பாடாகவே மணல் ஏற்றும் உழவு இயந்திர தாரருக்கு இரண்டு மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை என்ற பொய்யான வதந்திகளை பரப்பி இடை யூறு விளைவிக்க முனைகின்றனர்.

பருவ மழை தொடங்குதவற்கு முன்னர் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு தேவையான மணலினை விரைவாக விநியோகிக்க வேண்டும் என்ற முனைப்புடன் மகேஸ்வரி நிதியமானது செயற்பட்டு வரும் இவ் வேளை உழவு இயந்திர உரிமையாளர்களும், மணல் ஏற்றும் தொழிலாளர்களும் சீராக தமது செயற்பாட்டினை மேற்கொண்டு வருகின்றனர்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் இவ்வாறான விசமத்தனமான பிரசாரங்கள் தவிர்க்கப்பட வேண்டியவைகளாக காணப்படுகின்றன என்றுள்ளது. (ச)

## நடைமுறை...

ஒன்று... அரசியலுரிமை பிரச்சினை! இது இதுவரை காலமும் முழுமையாகத் தீர்க்கப்படாமல் இருப்பினும் அதற்கான முன் நகர்வுகள் நடந்து வருவது குறித்து நாம் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றோம்.

இன்னொன்று... இந்த நாட்டில் யுத்தம் தொடங்கியதிலும் அது அழிவு யுத்தமாக மாறி அந்த அழிவு யுத்தத்தை வெற்றி கொள்ள வேண்டிய கட்டாயத்தின் போது ஏற்பட்ட பிரச்சினைகளும் எமது மக்களின் இதுவரை அழியாத அவலங்களாக எம் முன்னால் விரித்து கிடக்கின்றன.

ஆகவே யுத்தத்தின் காரணமாக சகல மக்களும் அனுபவித்து வரும் அவலங்களுக்குத் தீர்வு கண்டு சகலருக்கும் புனர்வாழ்வும் புதுவாழ்வும் அளிக்க வேண்டியது இங்கு உடனடிக் கடமையாகும்.

இதை இன்னமும் சிறப்பாகவும் அர்த்த பூர்வமாகவும் செய்து முடிப்பதற்கு சர்வதேச சமூகமும் மேலும் முன்வர வேண்டும்.

தமிழ் மக்களின் அரசியலுரிமை பிரச்சினை குறித்து நாங்கள் யதார்த்தமாகவே இதுவரை சிந்தித்து வந்துள்ளோம். ஆகாயத்து சூரியனையும், சந்திரனையும் பூமிக்கு கொண்டு வந்து எமது கைகளில் தாருங்கள் என்று சாத்தியமற்ற விடயங்களை நாம் கேட்கவில்லை.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையலான பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி அந்த சட்டத்தின் பிரகாரம் அதற்கு இருக்க வேண்டிய சகல அதிகாரங்களையும் வழங்கி அந்த அடிப்படையில் ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சக வாழ்வையும் சமத்துவ உரிமையையும் நோக்கி எமது இலட்சிய கனவுகளை நடைமுறை நனவாக்குவதற்கு வழி சமைக்க வேண்டும் என்றே நாம் கேட்கின்றோம்.

பல்லின சமூகமக்கள் வாழும் இலங்கைத் தீவில் ஒரு இனம் உயர்ந்தும் இன்னொரு இனம் தாழ்ந்தும் ஏற்றத்தாழ்வுகளோடு வாழும் அரசியல் சூழ்நிலை இருக்குமாயின் அது இனங்களுக்கிடையிலான கசப்புணர் வையும் முரண்பாடுகளையும் தோற்றுவிக் கவே வழி சமைக்கும்.

ஆகவே இந்த நாட்டில் வாழுகின்ற சகல இன மக்களும் சம உரிமை வேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம்.

சமாதானத்தையும் சமவுரிமை சுதந்திரத்தையும் விரும்பும் எமது மக்களோடு அனைத்து அரசியல் ஜனநாயக சக்திகளும்இணைந்து ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்றுநம் அனைவரையும் அழைக்கின்றோம். (ச-5)


## திருத்தி வாசிக்கவும்

03.09.2010 அன்று வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட காரை அபிவிருத்திச் சபையின் பொதுக் கூட்ட விளம்பர தலைப்பினை காரைநகர் அபிவிருத்தி சபையின் பொதுக் கூட்டம் என திருத்தி வாசிக்கவும்.

உதவி அரசாங்க அதிபர்,
காரைநகர். (C-1002)

## இதயம் நெகிழ்ந்த அஞ்சலி



யாழ்/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாசாலையின் ஓய்வுபெற்றஅதிபர் அமரர் மார்க்கண்டு சிவபாலசுந்தரம் அவர்களின் மறைவையொட்டி எமது இதயம் நெகிழ்ந்த கண்ணீரஞ்சலியைக் காணிக்கையாக்கி அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
அதிபர்கள்.
நல்லூர்க் கோட்டம் (சி-1001)

## பெயர் மாற்ற அறிவித்தல்

இல.44/2,டேவிட் றோட்,யாழ்ப்பாணம் எனும் விலாசத்தைச் சேர்ந்த அருணி ராகிணி ஆகிய நான் எனது பெயரை பாஸ்கரன் மேரி மாகிறெற் என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.இன்று முதல் எனது சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பயன்படுத்துவேன் என்பதையும் அறியத் தருகின்றேன்.

இப்படிக்கு: உண்மையுள்ள
பா.மேரிமாகிறெற்
(2406)



# இன்று ஒரு தகவல்

## ஞானம்

ஒரு சராசரி மனிதனுடைய இயல்பு என்ன? இன்பம் வந்தால் துள்ளிக் குதிப்பான். துன்பம் வந்தால் சோர்ந்து போய் ஒரு மூலையில் உட்கார்ந்து விடுவான். இவன் தான் சராசரி மனிதன்.

ஆனால் ஒருத்தன் இன்பம் வந்தால் அதற்காக மகிழ்ச்சியடைவதில்லை; துன்பம் வந்தால் அற்காக சோர்ந்து போவதில்லை. என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படி இருந்தால் அவன் சாதாரண ஆளில்லை.

ஒரு ஊரில் ஒரு ஞானி இருந்தார். அவரைத் தேடிக் கொண்டு ஒரு பெரியவர் வந்தார்.

"ஐயா, ஞானத்தில் சிறந்த ஞானம் எது? என்று கேட்டார்.

இதற்கு அந்த ஞானி என்ன பதில் சொன்னார் தெரியுமா?

"இன்பத்தினால் மகிழ்ச்சியடையாமலும் துன்பத்தினால் சோர்வடையாமலும் இருப்பது தான் அது" என்றாராம்.

"சரி சுவாமி அப்படிப்பட்ட ஞானம் உங்களுக்கு எப்படி வந்தது?" என்று கேட்டிருக்கிறார் இவர்.

"அதை ஒரு கழுதையிடமிருந்து நான் கற்றுக் கொண்டேன்" என்றாராம் அவர்.

இவருக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு மாதிரியாக முழித்திருக்கிறார். இதை அவர் புரிந்து கொண்டார்.

" நீங்கள் நாளைக்குக் காலையில் நம்முடைய ஆச்சிரமத்துக்கு வாருங்கள். புரிய வைக்கிறேன்" என்றார்.

சரி, என்று இவர் போய்விட்டார்.

மறுநாட்காலையில் ஆச்சிரமத்துக்கு வந்து சேர்ந்தார். ஞானி அவரைக் கூப்பிட்டு உட்கார வைத்தார்.

"வாங்க, வந்து இப்படி உட்காருங்க கொஞ்ச நேரத்தில் இந்த வழியாக ஒரு கழுதை வரும் அதைக் கவனியுங்கள்" என்றார்.

இவருக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரே குழப்பமாக இருந்தது. இருந்தாலும் அந்த ஞானி சொன்னது மாதிரியே உட்கார்ந்திருந்தார்.

சிறிது நேரத்தில் அந்த வழியாக ஒரு கழுதை போனது. அதன் முதுகு நிறைய அழுக்கு மூட்டைகள். அதை சுமந்து கொண்டு போனது. ஒரு சலவைத் தொழிலாளி அதை ஓட்டிக் கொண்டு போனார்.

சிறிது தூரத்தில் ஒரு ஆறு இருந்தது. அங்கே போய் துணியெல்லாம் சுத்தப்படுத்திக் கொண்டு மாலையில் திரும்பி இந்த வழியாகவே வருவார்கள்.

ஞானி சொன்னது போலவே இந்தப் பெரியவர் அழுக்கு மூட்டையைச் சுமந்து கொண்டு போகும் அந்தக் கழுதையைக் கவனித்தார்.

கழுதை போய்விட்டது. அதற்குப்பின் ஞானியைத் திரும்பிப் பார்த்தார். இப்பொழுது அந்த ஞானி சொன்னார்.

"மாலை வரை நீங்கள் இங்கேயே இருக்க வேண்டும்" என்றார். அதே போல் இவரும் இருந்தார்.

அந்த ஞானி சொன்னார்.

" ஐயா.... இப்பொழுது கொஞ்ச நேரத்தில் அந்தச் கழுதை இந்த வழியாக திரும்பி வரும். அதையும் கவனியுங்கள்" என்றார்.

இவரும் கவனித்தார். கழுதை வந்தது. அதனுடைய முதுகில் சலவை செய்யப்பட்ட துணி மூட்டை. அது பாட்டுக்குச் சுமந்து கொண்டு போய்க் கொண்டிருந்தது.

பெரியவருக்கு ஒன்றும் புரியவில்லை. பொறுமையை இழந்து விட்டார்.

"சரி சுவாமி, இந்தக் கழுதைக்கும் உங்கள் ஞானத்துக்கும் என்ன சம்பந்தம்?" என்றார்.

இப்பொழுது அந்த ஞானி விளக்கினார்.

"ஐயா, இந்தக் கழுதை இதேபோல் தினமும் காலையில் அழுக்கு மூட்டைகளைச் சுமந்து கொண்டு ஆற்றுக்குப் போகிறது. மாலையில் வெண்மையான சுத்தமான துணிகளைச் சுமந்து கொண்டு திரும்பி ஊருக்குப் போகிறது.

காலையில் இது போகும் போது முதுகில் அழுக்கு மூட்டைகளைச் சுமந்து கொண்டு போகிறோமே! என்ற வருத்தமும் அதற்கில்லை.

திரும்பி வரும்போது சுத்தமான துணிகளை சுமந்து கொண்டு வருகிறோமே என்ற மகிழ்ச்சியும் அதற்கில்லை. இதைப் பார்த்துத் தான் நானும் அது மாதிரி ஞானத்தைக் கற்றுக் கொண்டேன்" என்றார்.

அதனால் யார் கற்றுக் கொடுக்கிறார்கள்–என்பதை விட எதைக் கற்றுக் கொள்கிறோம்–என்பது தான் முக்கியம்.

ஒரு திரைப்படத்தைப் பார்க்கும் வரைக்கும் சிரிக்கலாம். அழலாம். பார்த்து விட்டு வெளியே வரும் போது அழுது கொண்டே வரக்கூடாது.

ஒருத்தர் படம் முடிந்து வெளியே வரும் போது அருவி மாதிரி கண்ணீர் சிந்திக் கொண்டே வந்தார்.

"ஏன்சேர், படம் அவ்வளவு சோகமா?" என்று கேட்டார் இன்னொருவர்.

"இல்லை சேர், கூட்டம் மிகக்குறைவு. மொத்தமாக படம் பார்க்க வந்தவர்களே 15 பேர் தான் சேர்" என்றார் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே.

"அதற்கு நீங்கள் ஏன் சேர் அழுகிறீர்கள்?" என்றார் இவர்.

"இந்தப் படத்தின் தயாரிப்பாளரே நான் தான் சேர்" என்றார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# வடமராட்சி கிழக்குப் பகுதியில் இரண்டாம் கட்ட மீள்குடியேற்றம்

(அல்வாய்)

இராமாவில் இடைத்தங்கல் முகாம் மற்றும் குடத்தனை இடைத்தங்கல் முகாம்களில் வசிக்கும் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் எதிர் வரும் 9, 10 ஆம் திகதிகளில் மீளக் குடியமர்த்தப்படவுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட 6 கிராம சேவையாளர் பிரிவில் இவ் இரண்டாம் கட்ட மீளக் குடியமர்வு நடைபெறவுள்ளது.

இதற்கமைய செம்பியன் பற்று வடக்கு, செம்பியன் பற்று, மருதங்கேணி, தாளையடி, அக்கராயன், உடுத்துறை மற்றும் ஆழியவளை ஆகிய இடங்களுக்கு மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர். இம் மீளக்குடியேறும் மக்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக ஏற்கனவே மூடப்பட்ட இப்பகுதியில் உள்ள பாடசாலைகளை மீளவும் மூன்றாம் தவணைக்காகத் திறப்பதற்குத் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே இப்பாடசாலைகளில் கற்பித்து தற்காலிக இணைப்புப் பெற்ற சகல ஆசிரியர்களும் பாடசாலை ஆரம்பிக்கும் தினத்தில் சமுகமளிக்க வேண்டும் என வடமாகாண கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இம் மீளக்குடியேற்றத்தின் பின் இராமாவில் இடைத்தங்கல் முகாம் முற்றாக மூடப்படவுள்ளது.(ஸ்ரீ–2-19)

# நாடக அரங்கப் பயிற்சி

(குருநகர்)

யாழ்.திருமறைக்கலாமன்றத்தினால் நாடக அரங்கப் பயிற்சி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு புனித அந்தோனியார் ஆலய பங்குத்தந்தை ஏ.போல் தலைமையில் ஆலய மண்டபத்தில் நடாத்தப்படவுள்ளது.

கரவெட்டி பிரதேச பிரிவில் போரினால் பாதிக்கப்பட்ட இளைஞர், யுவதிகள் மற்றும் ஏனையவர்களுக்கும் பயன்படும் வகையில் வளவாளர் எஸ். யஸ்ரின் , நிகழ்ச்சி அலுவலர் சி. ஜெகன் ஆகியோரால் பயிற்சி வழங்கப்பட்டு நிறைவில் ஒன்றுகூடலும் இடம் பெறவுள்ளது. (ஸ்ரீ–2-39)

# இராசி பலன்

*04.09.2010*
*(ஆவணி 19, புதன்கிழமை)*
*ஏகாதசி பின்னிரவு 1.47 மணிவரை*
*திருவாதிரை முற்பகல் 9.04 மணிவரை*
*இராகுகாலம்9.05-10.35 மணிவரை*
*சுபநேரம் 3.05-4.35 மணிவரை*

**மேடம்** வெற்றியான செய்திகள் வீடு வந்து சேரும் நாள், உடன்பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கும், நீண்ட நாள் பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், வெளித் தொடர்புகள் விரிவடையும்.

**இடபம்** நீதி நிலை உயரும் நாள், மாற்றினத்தவர்கள் மகிழ்ச்சியான செய்திகளைக் கொண்டு வந்து சேர்ப்பர், பொது வாழ்வில் புகழ் கூடும், வாக்கு மேன்மை, ஆலயத்தை நோக்கி அடியெடுத்துவைப்பீர்கள்

**மிதுனம்** இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், இல்லத்திலும், உள்ளத்திலும் அமைதி கூடும், காணாமல் போன பொருளொன்று கைக்கு கிடைக்கும், வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உதவுவர்.

**கடகம்** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், நண்பர்களின் சந்திப்பால் திடீர் விஜயம் ஏற்படலாம், குடும்பத்தினரை அனுசரித்துக் செல்வீர்கள், செல்வாக்கு மேலோங்கும்.

**சிங்கம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், வெளிநாட்டுத் தொடர்பு விரிவடையும், பெரியோர்கள் வீட்டுக்கு வருவார்கள், பொருட்கள் வாங்கி மகிழும் நாள், பண வரவுகள் திருப்தி தரும்.

**கன்னி** கொள்கைப் பிடிப்போடு செயற்படும் நாள், பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதம் உண்டு.

**துலாம்** தடைகள் விலகி தனலாபம் பெருகும் நாள், இனிய செய்திக்கு நண்பர்கள் கைகொடுத்து உதவுவர், உறவில் ஏற்பட்ட விரிசல் மறையும், பொருளாதார நிலை உயர வழியொன்று யோசிப்பீர்கள்.

**விருச்சிகம்** சிந்தித்து செயற்படுவதன் மூலம் சிறப்படையும் நாள், குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முன்வருவீர்கள், வரவைக் காட்டிலும் செலவு கூடலாம், அபகீர்த்தி ஏற்படலாம், கவனமாக நடந்து கொள்ளவும்.

**தனுசு** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும், அரசு வழியில் அனுகூலம் கிட்டும்,வாழ்க்கைத்துணை வழியே வரவு வந்து சேரும், தாராளமாகச் செலவிட்டு மகிழ்வீர்கள்.

**மகரம்** மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறும் நாள், உறவினர் கைகொடுத்து உதவுவர், தேகநலன் சீராகி உற்சாகத்துடன் செயற்படுவீர்கள், தொழிலில் அதிக ஆர்வம் காணப்படும்.

**கும்பம்** இனிய செய்தி வந்து சேரும் நாள்,பிள்ளைகளால் பெருமை ஏற்படும், வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், தொழில் ரீதியாக புதிய திட்டங்களில் கையெழுத்திடுவீர்கள், சொத்துக்களால் நன்மையுண்டு.

**மீனம்** எதிர்பார்ப்புகள் நிறைவேறும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், உறவினர்கள் மூலம் ஏற்பட்ட தகராறு அகலும், வாகனத்தை திருத்தும் பணியில் ஈடுபடலாம்.

வளவன்

# வீட்டுத் தோட்டப் போட்டியில் வெற்றியீட்டியோர்

(யாழ்ப்பாணம்)

கமத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் இவ்வாண்டு நடத்தப்பட்ட "நாமே பயிரிடுவோம் நாட்டைக் கட்டியெழுப்புவோம்" திட்டத்தின் கீழ் நடத்தப்பட்ட வீட்டுத் தோட்டப் போட்டியில் அரச அலுவலர்களுக்கான தனிப்பட்ட போட்டியில் மாரீசன் கூடல் இளவாலையைச் சேர்ந்த கு.சிவலிங்கம் வடமா காணத்தில் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார்.

மேலும் பாடசாலை மாணவர்களுக்கான வீட்டுத் தோட்டப் போட்டியில் அளவெட்டி மேற்கைச் சேர்ந்த மா.திலக்சன் மூன்றாமிடத்தையும் பாடசாலை தோட்டப் போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி மாணவர்கள் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

இவர்களுக்கான பரிசில்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை அம்பாந்தோட்டையில் நடைபெறவுள்ள விவசாயக் கண்காட்சி விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது. (ஸ்ரீ–4)

# அதிபர்களுக்கான கலந்துரையாடல்

கல்வி அமைச்சின் அனுசரணையுடன் நடாத்தப்படும் தரம் 11 கணித விஞ்ஞான துரிதகற்றல் செயற்றிட்டத்தின் முதலாவது மதிப்பீடு தொடர்பான கலந்துரையாடல் யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலையில் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளதால் யாழ்.வலய 1ஏபி மற்றும் 1சி பாடசாலை, வகை II அதிபர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ–2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 70 | 80 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 60 | 100 | 90 |
| தக்காளி | 80 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 60 |
| கோவா | 70 | 80 | 80 |
| கரட் | 70 | 100 | 100 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 50 | 70 | 50 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 90 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 80 |
| பயற்றங்காய் | 100 | 100 | 100 |
| லீக்ஸ் | 100 | 130 | 100 |
| பீற்றூட் | 30 | 50 | 40 |
| கறிமிளகாய் | 60 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 100 |
| போஞ்சி | 120 | 150 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 50 |
| கீரை – 1 பிடி | 30 | 25 | 25 |
| தேசிக்காய் | 80 | 80 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30 | 30 |



இணுவையூர் ரசிகப்பிரியா சபாவின் மாதாந்த இசையரங்கும் எழுத்தாளர் கே.எஸ்.ஆனந்தனின் சந்திரிகை நூல்வெளியீடும் அண்மையில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் கலையரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இணுவையூர் வி.கே.குகானந்தன் தலைமையுரையாற்றுவதையும் நூலின் முதற்பிரதியை நல்லூர் பிரதேச செயலர் ப.செந்தில்நந்தனனிடமிருந்து த.தே.கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் பெற்றுக்கொள்வதையும் அருகில் நூலாசிரியர் கே.எஸ்.ஆனந்தன் நிற்பதையும் நிகழ்வில் இடம்பெற்ற நாட்டியக்கலைமாணி குமுதினி ஜெகரூபனின் மாணவிகள் வழங்கிய நடன நிகழ்வையும் நக்கீரனின் புல்லாங்குழல் இசை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

## ஆன்மீக நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வதிரி உல்லியனொல்லை அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலய உற்சவ காலத்தை யொட்டி நடைபெற்று வரும் தெய்வீக பேருரையில் இன்று சனிக்கிழமை மாலை 6.15 மணி முதல் 7.15 மணிவரை "விரதமும் விழாவும்" என்னும் விடயம் பற்றி வவுனியா மாவட்ட தமிழ்ச் சங்க தலைவரும் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய ஆசிரியருமான தமிழருவி த.சிவகுமாரன் சொற்பொழிவாற் றவுள்ளார். (ஸ்ரீ-4)

## முன்பள்ளி ஆசிரியர்களை சமூகமளிக்க கோரிக்கை

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்விவலயத்திற்குட்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களை நாளை மறு தினம் திங்கட்கிழமை காலை 9 மணி முதல் 12 மணிக்குள் தென்மராட்சிகல்விவலய அலுவலகத்திற்கு சமூகமளிக்குமாறு முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா தெரிவித்துள்ளார்.

அத்துடன் மேற்படி வலயத்திற்கு வரும் ஆசிரியர்கள் தத்தமது பாடசாலை மாணவர்கள் தொகை, நிலையத்தின் பதிவு இலக்கம், நிலைய ஆசிரியர்களின் கல்வித் தகைமை மற்றும் நிலையத்திற்கு உதவி செய்யும் தொண்டுநிறுவனங்களின் விபரங்களையும்சமர்ப்பிக்குமாறு தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-7-29)




## எழுத்தாக்கப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய முறைசாராக் கல்வி பிரிவால், சர்வதேச எழுத்தறிவு தினத்தை முன்னிட்டு விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களுக்கு எழுத்தாக்கப் போட்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ் .கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே விசேட தேவையுடைய மாணவர்கள் அனைவரையும் எழுதுகருவிகளுடன் தவறாது பங்குபற்றுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்று வரும் தெய்வீக இசையரங்கில் 21 ஆம் நாளான இன்று சனிக்கிழமை மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை திருமதி சுகன்யா அரவிந்தன் (பாட்டு), ஏ.ஜெயராமன் (வயலின்), வி.ரமணா (மிருதங்கம்) செல்வன் கே.நந்தகுமார் (முகர்சிங்) ஆகியோர் வழங்கும் திருமுறைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

✠✠✠

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நல்லூர் நாவலர்மணி மண்டபத்தில் ஆத்மீக சிந்தனையுடன் நடைபெற்றுவரும் சமயச்சொற்பொழிவு மற்றும் கலைநிகழ்வுகளில் இன்று பிற்பகல் 3 மணி முதல் 6 மணிவரை "வீடு குலைய முன்னே வந்து காத்தருள்வாய்" என்னும் விடயம் பற்றி செஞ்சொற் செம்மல் இரா. கேதீசன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து தெல்லிப்பழை பன்னாலை ஸ்ரீ கணேசா, நயினாதீவு அமுதசுரபி அன்னதானசபை ஆகிய அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளது.

✠✠✠

நல்லூர் சைவ மகா சபையினால் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன குருமூர்த்த மண்டபத்தில் நடைபெற்றுவரும் "வில்லிபாரதம்" பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு 'பாஞ்சாலி சபதம்'' என்னும் விடயம் பற்றி பிரம்மஸ்ரீ சிவ.வை நித்தியானந்த சர்மா தொடர் இசைப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ-4)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு தென்னங்கன்றுகள் விநியோகம்

(பொற்பதி)

பெருந்தோட்டக் கைத்தொழில் சபையின் வடமாகாண தெங்கு பயிர்ச்செய்கை சபையினால் மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் இடம்பெயர்ந்து வாழ்வோருக்கு தென்னங்கன்றுகள் வழங்கப்படுகின்றன.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து வந்து பொற்பதி, குடத்தனை மணற்காடு, அம்பன் ஆகிய கிராமங்களில் தற்காலிகமாக தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த குடும்பங்களில் குடும்பம் ஒன்றிற்கு தலா மூன்று தென்னங்கன்றுகள் வீதம் வழங்கப்படுகின்றன.

மேலும் இச்சபையினால் தெங்கு முக்கோண வலயப் பகுதியில் இருந்து தென்னங்கன்றுகள் கொண்டுவரப்பட்டு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையூடாக வழங்கப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது.

(ஸ்ரீ-4-64)

## பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு வலுவூட்டல் பயிற்சிகள்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்திலுள்ள பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு வலுவூட்டும் நோக்கில் பல்வேறு திட்டங்களை கட்டம் கட்டமாக நடைமுறைப்படுத்தவுள்ளதாக இலங்கை பெண்கள் பணியகத்தின் பணிப் பாளர் திருமதி பிரதீபா சேரசிங்கம் தெரிவித்துள்ளார்.

கடந்த 31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட செயலக மண்டபத்தில் யாழ் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி.உதயனி - நவரட்ணம் தலைமையில் நடைபெற்ற பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பத் தலைவிகளுக்கான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்புத்துறை கிராமத்தில் தும்புத் தொழில் அபிவிருத்திக்கான செயற்பாடுகள் கட்டம் கட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு கயிறு திரிக்கும் இயந்திரம், தும்பு தூர்க்கும் இயந்திரம் மற்றும் தும்புப் பொருட்களில் கைவினைப் பொருட்கள் செய்வதற்கான பயிற்சிகள், தும்புப்பொருட்களின் சந்தைப்படுத்தலை ஏற்படுத்தல் போன்ற நடவடிக்கைகளைப் படிப்படியாக முன்னெடுக்கவுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-7-51)

## வைத்தியசாலைப் பகுதியால் பயணிக்கும் பாரவூர்திகளால் நோயாளர்கள் சிரமம்

(அல்வாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் முன்பாக உள்ள வீதியால் பாரவூர்திகள் செல்வதைத் தடைசெய்யுமாறு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை மாவட்ட அதிகாரி வைத்திய கலாநிதி எஸ். ஜெயராஜா, பருத்தித்துறை பிரதேச செயலரைக் கோரியுள்ளார்.

இந்தக் கோரிக்கைக்கிணங்க பாரவூர்திகள் சங்கத்துடன் கலந்துரையாடி அனைத்துப் பாரவூர்திகளும் வேறு பாதையூடாக செல்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதேச செயலாளர் உறுதியளித்துள்ளார்.

இருப்பினும் இப்பாரவூர்திகள் தொடர்ந்தும் வைத்தியசாலையின் முன்னாலுள்ள வீதியைப் பயன்படுத்துவதால் நோயாளர்களும் பொது மக்களும் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர் எனவும்,

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸாரின் உதவியை நாட வேண்டி இருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ஸ்ரீ-2-19)

## 7 ஆவது நிறைவு விழாவும் வருடாந்த பொதுக்கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செவிப்புலனற்றோர் நிறுவனத்தின் 7 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்த பொதுக்கூட்டமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாவட்டப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தவுள்ளனர். (ஸ்ரீ-4)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். கிரிக்கெற் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் மத்தியஸ்தர்களுக்கான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மத்தியஸ்தர் சங்க தலைவர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## இலவச மாலை நேரவகுப்பு

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள அளவெட்டி வடக்கு பத்தானைப் பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பங்களில் பாடசாலை சென்று கல்வி பயிலும் தரம் 3 தொடக்கம் தரம் 8 வரையான 32 மாணவர்களுக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் இலவச மாலை நேர வகுப்பு நடாத்தப்பட்டு வருகின்றது.

அவ்வகுப்பு பத்தானையில் உள்ள பாரதிதாசன் சனசமூக நிலையத்தில் நடைபெறுகிறது.

இங்கு கணிதம், ஆங்கிலம், தமிழ், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் இம் மாணவர்களுக்கு கற்பிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## முன்பள்ளி விளையாட்டுவிழா

(சுழிபுரம்)

காட்டுப்புலம் கெங்காதேவி முன்பள்ளி மாணவர்களுக்கான வருடாந்த விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காட்டுப்புல கிராம அபிவிருத்திச் சங்க மைதானத்தில் தலைவர் த.சுதாகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திருக்குடும்ப கன்னியர்மட மாகாண இல்லத் தலைவி அருட்சகோதரி யோலன்ற் மத்தியாஸ் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக திருக்குடும்ப கன்னியர்மட மாகாண இல்லப் பொருளாளர் அருட் சகோதரி கிறீஸ்தா மற்றும் மானிப்பாய் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர் க.சுதாகரன், சுழிபுரம் கிராம அலுவலர் சி.ஜீவராசா, சங்கானை பனை தென்னை வள கூட்டுறவு சங்க பொது முகாமையாளர் சி.தயாளன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஸ்ரீ-4)

# கேள்வி கோரல்கள்

**இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு**
**பெருந்தெருக்கள் அமைச்சு**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

**யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வீதிகள், மதகுகளை புனர்நிர்மாணம் செய்வதற்கான கேள்விகோரல் அறிவித்தல்**

**பெருந்தெருக்கள் அமைச்சின் நிதியின் மூலம் உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்**

1. பின்வரும் புனர்நிர்மாண வேலைக்கான மூடிய கேள்வி கோரல்களை மாகாணப் பணிப்பாளர் – வ-கி(வ), பிரதம பொறியியலாளர், கேள்விச்சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் பெற்றுக் கொள்வார்.

| வேலை | கேள்வி பாதுகாப்பு பணம் | ஒப்பந்தகாரர் தரம் |
|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் மானிப்பாய் காரைநகர் வீதி 11/1 இல. இரும்புப் பால நிர்மாண வேலை. | 30,000.00 | M7 (C 8) |
| 2. புத்தூர் கந்தரோடை வீதி 12/2 இல மதகு மீள் நிர்மாண வேலை | 11,000.00 | M8 (C 9) |
| 3. கட்டுவன் மல்லாகம் சங்கானை வீதி 2/1 இல மதகு மீள் நிர்மாண வேலை | 12,000.00 | M8 (C 9) |
| 4. புத்தூர் கந்தரோடை வீதி 12/1 மதகு மீள் நிர்மாண வேலை | 11,000.00 | M8 (C 9) |
| 5. சண்டிலிப்பாய் சேந்தான்குளம் வீதி 2/1 இல மதகு மீள் நிர்மாண வேலை | 8,000.00 | M8 (C 9) |
| 6. சுண்டிக்குளி கொழும்புத்துறை வீதி 1/3 இல மதகு மீள் நிர்மாண வேலை | 14,000.00 | M8 (C 9) |
| 7. யாழ்ப்பாணம் மானிப்பாய் காரைநகர் வீதி 11/1 இல. இரும்புப்பால அணுகு வீதி வேலை (கட்டம் 2) | 10,000.00 | M8 (C 9) |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 14.09.2010 அன்று முற்பகல் 10 மணியுடன் முடிவடையும். முற்பகல் 10.30 மணியளவில் கேள்விப்பத்திரங்கள் பிரதம பொறியியலாளர் அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்விப்பத்திரங்களை தயாரிப்பதற்குரிய படிவங்களை பின்வரும் காரியாலயங்களில் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

I. மாகாணப்பணிப்பாளர் வ-கி (வ) அலுவலகம், கடற்கரை வீதி, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்

II. பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்.
கேள்விப்பத்திர ஆவணங்கள் 06.09.2010 தொடக்கம் 13.09.2010 வரை மீள் அளிக்க முடியாத வைப்புத் தொகையான 750/- + வெறுமதி சேர்வரி 12% செலுத்திப் பெறவேண்டும்.

02) தகுதி வாய்ந்த கேள்வி கோரல்கள் கோருபவர்கள் பின்வரும் தகைமைப் பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.

03) கேள்வி கோரல் ஆவணங்கள் பின்வரும் அலுவலகங்களில் இலவசமாகப் பார்வையிட முடியும்.

I. மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரைவீதி, யாழ்ப்பாணம்.

II. பிரதம பொறியியலாளர் அலுவலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.

04) முன் கேள்வி கோரல் கூட்டம் 13.09.2010 அன்று காலை 9.30 மணிக்கு பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெறும்.

05) கேள்விப்பத்திர ஆவணங்கள் கேள்வி கோரல் முடிவு திகதியில் இருந்து 120 கலண்டர் நாட்கள் வரை செல்லுபடியாக இருக்கும்.

06) மேலே குறிப்பிடப்பட்ட கேள்விப் பாதுகாப்பு பணத்தொகை அவற்றிற்குரிய பாதுகாப்பு பத்திரம் ஒவ்வொரு கேள்விப் பத்திர ஆவணத்துடன் இணைத்திருத்தல் வேண்டும். ஏற்றுக்கொள்ளக் கூடிய பாதுகாப்பு பத்திரம் இல்லாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07) மூடி ஒட்டப்பட்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் மாகாணப் பணிப்பாளர் வ-கி(வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாண காரியாலயத்தில் மேற்குறிப்பிட்ட முடிவு காலத்திற்கு முன் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.

08) கிடைக்கப்பெற்ற கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட முடிவுறும் நேரத்தின் பின் உடனடியாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாண அலுவலகத்தில் திறந்து பார்க்கப்படும்.

கேள்வி கோரல் கோருபவர்கள் அல்லது அவரது பிரதிநிதிகள் கேள்விப்பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

09) மேலதிக விபரங்கள் பின்வரும் அலுவலகங்களின் தொலைபேசி இலக்கங்களுடன் தயவு செய்து தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளவும்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம். |
|---|---|
| மாகாணப்பணிப்பாளர் வ-கி (வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரைவீதி, யாழ்ப்பாணம். | 021-222-2517 |
| அல்லது | |
| பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம். | 021-222-2968 |

**மாகாணப் பணிப்பாளர் வ-கி (வடக்கு)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கடற்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**பிரதம பொறியியலாளர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கடற்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C-1000)

## டெங்கு ஒழிப்பு குறித்த கலந்துரையாடல்

(அல்வாய்)

யாழ். மாவட்டத்தில் டெங்கு நோய் பரவி வருவதை முற்றாக ஒழிப்பதற்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்.

இதற்கமைய முதற்கட்டமாக, இன்று காலை 10 மணிக்கு யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இதற்கு யாழ். மாவட்டத்தில் உள்ள சகல கல்விப் பணிப்பாளர்களையும் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்களையும் சமூகமளிக்குமாறு அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-2-19)

## கொழும்பில் வாகன விபத்துக்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்கப்படும் 55 சதவீத மானோர் மோட்டார் வாகன விபத்துக்குள்ளாகியவர்கள் என்று வைத்தியசாலை அவசரசிகிச்சைப் பிரிவின் பணிப்பாள் டாக்டர் பிரசாத் ஆரியவன்ச தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களில் 14 சதவீதமானோர் அவசர விபத்துக்குள்ளாகியோர் என்றும் இவ்வாறான நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க கொழும்பு தேசிய வைத்தியசாலை வருடாந்தம் 15 மில்லியன் அமெரிக்க டொலர்களை செலவிடுவதாகவும் அவர் தெரிவித்தார்.

மதுபோதையில் வாகனங்களை செலுத்துதல், தொழில்நுட்பக் கோளாறு மற்றும் கூடுதலான வேகம் உட்பட பல சுற்றாடல் காரணிகளால் இவ் வீதிவிபத்துக்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஶ்ரீ-7)

## சுதந்திரக்கட்சியின் தேசிய மாநாட்டில் 3 பிரேரணைகள் நிறைவேற்றம்

ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாட்டில் மூன்று பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

அரசியல் யாப்பு திருத்தம், பொருளாதார சுபீட்சம், ஐக்கியத்தின் ஊடாக எதிர்காலத்தை வெற்றி கொள்ளல் ஆகிய மூன்று பிரேரணைகளுமே இம்மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

ஶ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் 59 ஆவது வருட தேசிய மாநாடு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

பிரதமர் டி.எம்.ஜயரட்ன அரசியலமைப்பு திருத்தப் பிரரேரணையையும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பொருளாதார சுபீட்சம் தொடர்பான பிரேரணையையும் அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க ஐக்கியத்தின் ஊடாக எதிர்காலத்தை வெற்றி கொள்ளல் பிரேரணையை இம்மாநாட்டில் சமர்ப்பித்தனர்.

மாநாட்டில் பங்கு பற்றிய சகல போராளர்களும் தங்களது கரங்களை உயர்த்தி இந்தப் பிரேரணைகளை ஏகமனதாக நிறைவேற்றினர். (2)

## இலங்கையில் நாளொன்றுக்கு சராசரியாக 12 பேர் தற்கொலை

(கொழும்பு)

இலங்கையில் நாள் ஒன்றுக்கு சராசரியாக 12 பேர் தற்கொலை செய்து கொள்வதாக ஶ்ரீலங்கா சுமித்ரயோ என்ற அமைப்பு தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

உலகளவில் தற்கொலைகளின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக அந்த அமைப்புச் சுட்டிக்காட்டியுள்ளதுடன் உலகளாவிய ரீதியில் வருடமொன்றில் குறைந்த பட்சம் ஒரு மில்லியன் பேர் தற்கொலை செய்து கொள்வதாகவும் ஒவ்வொரு 40 செக்கனுக்கு ஒரு தடவையும் ஒருவர் தற்கொலை செய்து கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் 1995 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கையில் தற்கொலைச் சம்பவங்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஶ்ரீ-2)

## மிஸ் லண்டன் கத்ரீனாவுக்கு இலங்கையில் இரகசிய திருமணம்



மிஸ் லண்டன் கத்ரீனா ஹொட்ஜ் (வயது-23) இலங்கையில் இரகசியமாகத் திருமணம் செய்துள்ளார்.

அவருக்கும் சிங்களவரான இராணுவச் சிப்பாய் ஒருவருக்கும் இடையில் இத்திருமணம் நடைபெற்றுள்ளது.

கடந்த ஜூன் மாதம் இருவரும் திருமணம் செய்து இருக்கிறார்கள்.

கத்ரீனா ஹொட்ஜ் கடந்த நவம்பர் மாதம் மிஸ் லண்டனாக தெரிவானார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் இராணுவ கோப்ரலாக பதவி வகித்துள்ளார். (ஶ்ரீ-2)



மக்கள் வங்கியின் வல்வெட்டித்துறை மற்றும் அச்சுவேலிக் கிளையினர் தமது நீடித்த கருமபீடங்களை அண்மையில் உடுப்பிட்டி, புத்தூர் ஆகிய இடங்களில் ஆரம்பித்துவைத்துள்ளனர். இவ்விழாவில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யூ.கருணஜீவா ஆரம்ப வைப்புப் பணம் ஏற்றுக்கொள்வதனையும் பயனாளி ஒருவருக்கு உழவு இயந்திரம் வழங்குவதையும் அருகில் மக்கள் வங்கியின் நிறைவேற்று அதிகாரியும் பொதுமுகாமையாளருமான பி.வி.பத்திரன மற்றும் யாழ்.பிராந்திய முகாமையாளர் சி.பத்மநாதன், வங்கி உத்தியோகத்தர்கள் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# தேசிய மட்ட கணனி வன்பொருள், வலையமைப்பு சீர்திருத்தல் பராமரிப்பு வேலைத் திட்டம்

தேசியமட்ட கணனி வன்பொருள், வலையமைப்பு சீர்திருத்தல் பராமரிப்பு வேலைத் திட்டமானது யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா மாவட்டத்திலுள்ள • கல்வி வலயங் களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கமைய வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வவுனியா வடக்கு,வவுனியா தெற்கு, துணுக்காய் மற்றும் முல்லைத்தீவு ஆகிய கல்வி வலயங்களுக்கு நாளை மறுதினம் திங்கட்கிழமை வவுனியா தெற்கு கணனி வளவு நிலையத்திலும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மன்னார், மடு ஆகிய கல்வி வலயங்களுக்கு எதிர்வரும் 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மன்னார் கணனி வள நிலையத்திலும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம், தீவகம் வலிகாமம் ,கிளிநொச்சி ஆகிய கல்வி வலயங்களுக்கு எதிர்வரும் 8,9,10 ஆகிய திகதிகளில் யாழ்.கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்திலும் வடமராட்சி, தென்மராட்சி கல்வி வலயங்களுக்கு எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை வடமராட்சி கணனி வள நிலையத்திலும் பராமரிப்பு வேலைத்திட்டம் நடாத்தப்படவிருக்கின்றது.

இதேவேளை மேற்படி வலயப் பாடசாலைகளிலிருந்தும், வலய அலுவலகங்களிலிருந்தும் உத்தரவாத காலம் முடிவடைந்த சீர்திருத்தல் பராமரிப்பு வேலைத் திட்டத்திற்கு உட்படுத்த வேண்டிய சகல கணனிகளையும், வலையமைப்பு உபகரணங்களையும் மேற் குறிக்கப்பட்ட பராமரிப்பு நிலையத்துக்கு குறித்த தினத்தில் காலை 8.30 மணிக்கு முன்னதாக கொண்டு வருவதற்கான போக்குவரத்து ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் சகல வலயங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பராமரிப்பு நிலைய ஏற்பாடுகளை அவ்வவ் வலய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப இணைப்பாளர் மேற்கொள்ள வேண்டும்.

இதற்கமைய வவுனியா மாவட்டத்திற்கு வவுனியாதெற்கு த.தொ.தொ. வலய இணைப்பாளரும்,மன்னார் மாவட்டத்திற்கு மன்னார் த.தொ.தொ. வலய இணைப்பாளரும் , யாழ்ப்பாண மாவட்டத்திற்கு யாழ்.வலய த.தொ.தொ. இணைப்பாளர், வடமராட்சி த.தொ.தொ. இணைப்பாளர் ஆகியோரும் மேற்கொள்ளவேண்டும்.

பராமரிப்பு வேலைகள் யாவும் மத்திய கல்வியமைச்சின் த.தொ.தொ.பிரிவிலிருந்து வருகைதர இருக்கும் உத்தியோகத்தர் மாகாணக்கல்வித் திணைக்கள உத்தியோகத்தர் ஆகியோர் மேற்பார்வையில் கணனி வன்பொருள் வலையமைப்பு தீர்வுக் குழுவினால் மேற்கொள்ளப்படும்.எனவே இவ் விடயங்களை தங்கள் வலையக் கணனி வன்பொருள் வளவாளர் குழுவிற்கு அறியப் படுத்துமாறும் வன்பொருள் வளவாளர் குழு உறுப்பினர்கள் குறித்த தினத்துக்கு முன்னர் பொருத்தமான பாடசாலைகளுக்கு நேரடியாகச் சென்று கொண்டு வரப்பட வேண்டிய கணனிகள் , உபகரணங்கள் பற்றிய விளக்கத்தையும் வழிப்படுத்தலை யும் மேற்கொள்வது இவ் வேலைத்திட்டம் வெற்றியடைவதற்கு உறுதுணை புரியும். எனவே அவர்கள் பாடசாலைகளுக்கு தரிசிப்பதற்கு ஏற்ற அறிவுறுத்தல்கள் வழங்க வேண்டும்.

கிளிநொச்சி,துணுக்காய், முல்லைத்தீவு மடு வலயங்களில் உத்தரவாதகாலம் முடிவடைந்த கணனிகள் இல்லை எனக் கொள்ளப்பட்டாலும் அவ்வாறான கணனிகள் ஏதும் இருப்பின் இவ்வேலைத்திட்டத்தின் கீழ் அவற்றை சீர்திருத்திக்கொள்ளலாம் எனவும் சகல வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் வடமாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2-19)

# அரசு பெரும்பான்மை பெற வழி ஏற்படுத்தியது ஐக்கிய தேசியக் கட்சியே

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற வழி ஏற்படுத்திக் கொடுத்தது ஐக்கிய தேசியக் கட்சியே என மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்திற்கு எதிராக எந்தவித நிபந்தனைகளுமின்றி நாம் செயற்பட்டு வருகின்றோம்.

மேற்படி திருத்தச் சட்டத்திற்கு எதிராக நீதிமன்றம் சென்ற ஒரே ஒரு அரசியல் கட்சி மக்கள் விடுதலை முன்னணி தான்.

அரசாங்கத்திற்கு மூன்றிலிரண்டு பெரும்பாண்மை பெற வழி ஏற்படுத்திக் கொடுத்தது ஐக்கிய தேசியக் கட்சியே.

மேலும் யானைச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முடிந்தால் அரசியலமைப்பு திருத்தச் சட்டத்திற்கு எதிராக வாக்களித்து பார்க்கட்டும் என ரில்வின் சில்வா சவால் விடுத்துள்ளார். (ஸ்ரீ-2)

# வடக்கு -கிழக்கில் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன

(கொழும்பு)

வடக்கு- கிழக்கில் உள்ள ஆயிரம் பாடசாலைகள் துரித அபிவிருத்தியின் கீழான கல்வி அபிவிருத்தி கல்வி வெளியீடு எனும் கருப்பொருளின் நிதி வழங்கப்பட்டு முன்னேற்றப்படவுள்ளன.

2010 ஆம்ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டுகளைக் கொண்டு இத் துரித அபிவிருத்தி இடம்பெறவுள்ளன.

இதற்கான 6 பில்லியன் ரூபாவினை வழங்க உலக வங்கி முன்வந்துள்ளது. கல்வியமைச்சர் பந்துலகுணவர்த்தன இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்ளடுள்ளார்.

வடக்கு -கிழக்குப் பகுதிகளில் உள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்களை துரிதமாக செயற்பட்டு தாம் கோரும் புள்ளிவிபரங்களை வழங்கி உதவுமாறு கல்வி அமைச்சர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# தமிழ்பேசும் மக்களுக்கு பாதிப்பில்லை என்றுகூறி 18ஆம் திருத்தத்திற்கு ஆதரவளிப்பது அரசியல் மோசடியாகும்

## மனோகணேசன் தெரிவிப்பு

ஜனாதிபதிப் பதவியில் ஒருவரே தொடர்ந்து இருப்பதற்கு வழி ஏற்படுத்திவிட்டு, அவரது கைகளில் அனைத்து அதிகாரங்களையும் வழங்கிவிட்டு, தேர்தல் ஆணையாளரை வெறும் பொம்மையாக ஆக்கிவிட்டு, ஏகாதிபத்திய ஆட்சிக்கு வழிசமைப்பதே உத்தேச 18ஆம் திருத்தமாகும். இந்த அரசியலமைப்பு திருத்தத்திற்குத்தான் இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு பாதிப்பில்லை என்ற வாதத்தை முன்வைத்து சில தமிழ், முஸ்லிம் கட்சிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவளிக்க முனைகிறார்கள். இத்தகைய முனைபப்பு ஒரு அரசியல் மோசடியாகும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு தொடர்பில் கருத்துத் தெரிவித்த மனோகணேசன் மேலும் கூறியதாவது,

உத்தேச 18 ஆம் திருத்த சட்டமூலம் பல திருத்தங்களை அரசியலமைப்பிற்கு கொண்டு வருகின்றது. முதலாவது, ஜனாதிபதி பதவியை வகிக்கும் ஒருவர் இரண்டு முறைக்கு மேல் அப்பதவியை வகிக்கக்கூடாது என்ற விதி அகற்றப்படுகின்றது.இரண்டாவது, 17 ஆவது திருத்தத்தின் மூலமாக உருவாக்கப்பட்ட 10 பேர் கொண்ட அரசியலமைப்பு பேரவை 5பேர் கொண்ட வெறும் ஆலோசனைக்குழுவாக மாற்றி அமைக்கப்படுகின்றது. மூன்றாவது , அரசசேவை உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பிலான சுயாதீன ஆணைக் குழுக்களின் அங்கத்தவர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு மாத்திரம் வழங்கப்படுகின்றது. நான்காவது, அரசாங்க திணைக்களத்தலைவர்களை நியமிக்கும் இடமாற்றம், நீக்கும் அதிகாரங்களை அமைச்சரவைக்கு மாத்திரம் மட்டுப் படுத்தப்படுகின்றன. ஐந்தாவது, பொலிஸ் ஆணைக்குழுவின் அதிகாரங்கள் பொலிஸ்மா அதிபருக்கு மாற்றப்படுகின்றன. ஆறாவது, தேர்தல் காலங்களில் அரச ஊடகங் களை கண்காணிப்பது, அரசாங்க வளங்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பது, பொலிஸார் பாரபட்சத்துடன் நடந்துகொள்வதை நிறுத்துவது, அரச ஊழியர்கள் இடமாற்றம் செய்வதை தடை செய்வது ஆகியவை தொடர்பிலான தேர்தல் ஆணையாளரின் அதிகாரங்கள் இரத்துச் செய்யப்படுகின்றன. ஏழாவது, தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்படும் வரை பதில் ஆணையாளரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்படுகின்றது.

இந் நாட்டிலே தமிழரோ, முஸ்லிமோ ஜனாரதிபதியாக முடியாது எனக் கூறி



அதனால் இத்திருத்தங்கள் மூலமாக வரும் பதிப்புக்களை நாம் கணக்கில் எடுக்கத் தேவையில்லை என்று கூறி சில தமிழ் பேசும் கட்சிகள் அரசியல் நடத்துகின்றன. தமிழ், முஸ்லிம் என்ற கோணத்தில் இருந்து பார்ப்பதை விட, இலங்கையர் என்ற கோணத்தில் இருந்து இந்த உத்தேச திருத்தத்தை நாங்கள் பார்க்கவேண்டும்.இன்று நாட்டிலே ஜனநாயக அரசியல்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் சமூக அமைப்புக்களும் இந்த அரசாங்கத்தின் ஏகாதிபத்திய ஆட்சியை முன்னிறுத்தும் இந்நடவடிக்கையை எதிர்ப்பதற்கு தயாராகி வருகின்றன. இச் சக்திகளுடன் தமிழ்பேசும் மக்களும் கைகோர்த்துக்கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ)

# ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா புறக்கணிப்பு



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமார துங்க புறக்கணிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க அழைக்கப்படவில்லை என்பதுடன் விழா மேடையில் அமைக்கப்பட்டிருந்த பாரிய பதாகையில் கட்சியின் முன்னாள் தலைவர்களினது புகைப்படங்கள் காணப்பட்ட போதிலும் சந்திரிகாவின் படம் அதில் உள்ளடக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் முக்கிய தலைவர்களாக எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டார நாயக்க, சிறிமாவோ பண்டார நாயக்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்களின் புகைப்படங்கள் அந்த பதாகையை அலங்கரித்த போதிலும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்காவின் புகைப்படம் குறித்த பதாகையில் காணப்படவில்லை. (ஸ்ரீ-2)

# உள்ளூராட்சிமன்ற திருத்த சட்டம் தொடர்பில் கிழக்கு மாகாண சபையிடம் கருத்து கோரப்படவுள்ளது

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் திருத்தச் சட்டம் தொடர்பில் கிழக்கு மாகாண சபையிடம் கருத்து கோரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த திருத்தச் சட்ட மூலம் தொடர்பான யோசனைத் திட்டத்தை கிழக்கு மாகாணசபை ஏற்கனவே எதிர்த்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த விடயம் குறித்து பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

மாகாணசபையினால் குறித்த சட்ட மூலத்திருத்தம் நிராகரிக்கப்பட்டதன் பின்னர் எவ்வாறான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது தொடர்பில் விளக்குமாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் கோரியுள்ளார்.

விளக்கமளிக்கப்பட்டதன் பின்னர் கிழக்கு மாகாணசபையில் இந்த திருத்தச் சட்ட மூலம் தொடர்பான விவாதம் நடைபெறும் என தெரிவித்துள்ளார்.

திருத்தங்கள் அமுல்படுத்தும் போது சிறுபான்மை மக்களின் அபிலாசைகள் கருத்திற் கொள்ளப்படும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் உறுதியளித்துள்ளதாக சந்திரகாந்தன் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# இடம்பெயர் இந்திய வம்சாவளி தமிழர்களின் காணிகள் ஒப்படைக்கப்படும்

## இலங்கை இந்தியாவிடம் உறுதி

(கொழும்பு)

இடம்பெயர் இந்திய வம்சாவளித் தமிழர்களின் காணிகள் மீள ஒப்படைக்கப்படும் என இலங்கை அரசாங்கம் இந்தியாவிடம் உறுதியளித்துள்ளது.

இந்திய வம்சவாளித் தமிழர்களின் காணிகளை இராணுவத்தினர் பயன்படுத்தி, வருகின்ற விவகாரம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தியதாக இந்திய வெளி விவகாரச் செயலாளர் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, தம்மிடம் உறுதியளித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

1977 ஆம்ஆண்டு கலவரத்தின் பின்னர் வவுனியா பிரதேசத்தில் மீளக்குடியேற்றப்பட்ட இந்திய வம்சாவளி தமிழர்கள் தற்போது மெனிக்பாம் முகாமில் தங்கியிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுமார் 150க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குறித்த பிரதேசங்களில் வாழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)




*136 ஆவது அஞ்சல்தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை வெளிச்ச வீட்டிற்கு அண்மையில் நேற்றுமுன்தினம் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்பட்டது. இந்நிகழ்வின் ஆரம்ப விழாவில் வடமாகாண அத்தியட்சகர் குமரகுரு, யாழ்ப்பாணப் பிரதம தபாலதிபர் யோகஞானம் மற்றும் பருத்தித்துறை தபாலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் உள்ளிட்ட குழுவினரைப் படத்தில் காண்பதுடன் இவ் ஒலிம்பிக் தீபமானது குடாநாடு பூராகவும் சென்று ஒக்டோபர் 6ஆம் திகதி அனுராதபுரத்தை சென்றடையும் என்பது குறிப்பிடத்தக்கது.*

# நல்லூரான் திருவடிக்கு இன்று 21 ஆம் திருவிழா




படங்கள் -அரவிந்

## குன்று தோறாடும் குமரா

குன்றுதோ றாடல் செய்யும்
குமரனைத் தொழும றந்தோர்
வன்றிற லவுணர் கோமான்
மாபெரும் சூர னேபோல்
அன்பிலா நெஞ்சத் தோடு
அறவழி தவறி நாளுந்
துன்நெறி யதனிற் சென்று
தூண்டுவர் துயரை மேலும்

சி.வெற்றிவேலு, வட்டுக்கோட்டை

## நல்லை வாழ்வே

உன்னைச் சரண்புகல் அன்றி ஓர் மார்க்கம் நானறியேன் என்
சின்னத் தனங்கள் எல்லாம் போக்கிடுவாய் - என்னைப்
பொருளாக்கி எது வரினினும் காப்பாய்
திரு வாக்கும் நல்லை வாழ்வே

கும்பிடேன் உனை அன்றி - ஒருவரை
அம்பிடேன் வஞ்சர் வலைதனில் - செம்பட்டு
மேனியாய் துன்பக் கடல் கடக்கத்
தோணியாய் நிற்பாயே துணை

கா.கார்த்திகேசு , நல்லூர்

## ஆவணியில் வருவாய் நீ!

சேவற் கொடியேற்றி மயிலேறி வருவாய்
காவடிகள் ஆடிவரும் நல்லூர் மருகா
அடியார்கள் அங்கமது வீதியினில் பிரதிஸ்டை
வருடாந்தம் ஆவணியில் நல்லூரில் முருகா

சிவனவன் மைந்தனே நல்லூர்க் கந்தா
உமையவள் இளவலே அலங்காரக் கந்தா
மூத்த கணபதியின் தம்பி நீ கந்தா
வள்ளி தெய்வானையுடன் வருவாய் கந்தா

ஆ.கந்தசாமி, கரவெட்டி

## நல்லூரான் திருவீதி...

நல்லூரான் வீதியிலே நடந்து வர நம்முடைய
தொல்வினைகள் தீருமப்பா ; துயரங்கள் - தொலையுமப்பா
செல்லப்பாச் சித்தரவர் திருப்பாதம் பட்டதனால்
பொல்லாப்பே இல்லையப்பா பொடிப் பொடியாகும் -வினைகளப்பா
கல்லாத பேர்களையும் கற்றறிந்த பேர்களையும்
கண்போலக் காக்கின்ற கந்தப்பர் வீதியப்பா
செல்லாமல் வருகின்ற பொல்லாத நோய்களெல்லாம்
இல்லாமல் செய்கின்ற இணையில்லா வீதியப்பா

வி.துரைராஜசிங்கம், தோப்புக்காடு, காரைநகர்

அழகுமயில் மீதமர்ந்து அருள்தர வா முருகா!



க.கு.கந்தையாபிள்ளை அன்சன்ஸ்
பல்பொருள் வாணிபம்
இல. 318, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# ஈழத்தவர் வரலாறு


25

## 4. சிங்கை நகர் அரசு

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

சோழன் முதலாம் பராந்தகனின் தலை நகர்களில் ஒன்று சிங்கபுரமாகும். இம்மன்னன் ஈழத்தைத் தனது ஆட்சியின் கீழ் வைத்திருந்தான், உத்தரதேசத்திலும் இவனது ஆட்சி நிலவியது. அத்தலைநகரின் பெயர் இங்கு வழங்கலாயிற்று எனப் புஸ்பரத் தினம் கருதுகிறார்.

ஆனால், சிங்கைநகர் என்றபெயர்,



பண்ணைப் பாலம்

முதன்முதல் கதிரமலையிலிருந்து தலை நகரை வேறிடத்திற்கு மாற்றிப் புதிய தலை நகர் ஒன்றினை உருவாக்கிய உக்கிரசிங்கனின் பெயரைத்தாங்கி சிங்க(ன்) நகர் என விளங்கியிருந்தது எனக் கொள்வதே சாலப் பொருத்தமானது.

தமிழரசின் ஆரம்பத் தலைநகரான சிங்கைநகர் என்பது யாழ்ப்பாணத்திற்கு வெளியே வன்னிப் பிராந்தியத்தில் குறிப்பாகப் பூநகரியில் இருந்ததெனக் கூறமுடியும். வல்லிபுரப்பகுதியிலேயே சிங்கைநகர் இருந்ததெனவும், நல்லூருக்கு அருகில் இருந்ததெனவும் வரலாற்றாசிரியர்கள் கொள்வது ஏற்றதாகவில்லை. சிங்கைநகரை உக்கிரசிங்கன் பகுதியிலே நிறுவினான் என்பது பொருத்தமானது.

ப.புஸ்பரட்ணத்தின் ஆய்வுகளில் இருந்து பூநகரிப்பிரதேசம் பண்டைய இராச்சியம் ஒன்றின் வளமான பிரதேசமாக விளங்கியிருக்கிறது எனத் தெரிகிறது. பூநகரிப்பிரதேசத்தில் கிடைத்த அகழ்வாராய்ச்சிப் பொருட்கள் இதனை நிரூபிக்கின்றன.

சிங்கள நூல்களிளலிருந்தும் கம்பளைக் கல்வெட்டிலிருந்தும் சிங்கைநகர் அலையெறியும் கடற்கரையோரத்தில் அமைந்திருந்தது எனத் தெரிகிறது. 'பொங்கொலி நீர்ச்சிங்கை நகராரியன்' என கோட்ட கமக்கல்வெட்டு குறிப்பிடுகிறது.

யாழ்ப்பாணக் கடனீரேரி அன்று பொங்கு கடலாகவே விளங்கியது. சுண்டிக்குள மணல் தடை, ஆனையிறவு மணல் அணை, பண்ணைப் பாலம், பொன்னாலைப்பாலம் எதுவுமின்றி இந்து சமுத்திரத்தின் கிழக்கு-மேற்கு இணைப்பு, இக்கடனீரேரியைப் பொங்கு கடலாக வைத்திருந்தது.



ஆனையிறவு

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தரைக்கீழ் நீர்வளத்தின் பயன்பாட்டை உணராத எமது மூதாதையினரான பண்டைய தமிழ் மக்கட் கூட்டத்தினர் தமக்குப் பரீட்சயமான தரைமேல் வடிகாலமைப்பைக் கொண்ட நதிகள் பாய்கின்ற வன்னிப் பிரதேசத்தை ஆரம்பத்தில் தமது வதிவிடங்களாகக் கொண்டிருந்தனர் எனக் கொள்ளலாம். பூநகரி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களின் தரையமைப்பும் வடிகாலமைப்பும் நீர்ப்பாசனக்குளங்களை நிறுவிப் பயிர்ச்செய்கை பண்ணச் சாதகமான நிலமை அவர்களால் ஆரம்பத்தில் விரும்பப்பட்டிருக்கின்றது. தரைமேல் வடிகாலற்ற யாழ்ப்பாணக் குடாநாட்டுப்பிரதேசமானது, மணல் கிராமமாகவும் (வலிகாமம்), மணற்றியாகவும் (வடமராட்சி) எமது பண்டைய மக்களால் கருதப்பட்டு, விரும்பிக் குடியேற்றப்படாது இருந்தது. எனவே தமிழரது பண்டைய குடியிருப்புகள் யாழ்ப்பாணக் குடாநாடு தவிர்ந்த பெருநிலப் பரப்புகளில் கூடுதலாக அமைந்திருந்தன என்பதில் எவ்வித ஐயமில்லை.

சிங்கை நகரிலிருந்து அவனரசு செய்யுங்காலத்தில் நரசிங்கன் என்னும் ஓர் ஆண்மகவும் செண்பகவதி என்னும் பெண் மகவும் பிறந்தார்கள். உக்கிரசிங்கனின் பின் நரசிங்கன், ஜெயதுங்கவரராசசிங்கன் என்னும் நாமத்துடன் அரசனானான். அவன் அரசியற்றும் நாளிலே யாழ்பாடி என்னும் பாலகுலத்தவன் ஒருவன்.

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்

பரிசில் பெறுவான் வேண்டி அரசவைக்கு வந்து தனது திறமையைக் காட்டினான். அரசன் மகிழ்ந்து இப்போது கரையூர், பாசையூர் என்று அழைக்கப்படுவதாகிய மணல் மேட்டை பரிசிலாகக் கொடுத்தான். யாழ் பாடியும் உவகையுடன் ஏற்று தன்னூர் சென்று தன் குலத்தவருடன் வந்து அவ்விடத்தை திருத்திக் குடியேறினான்.

(தொடரும்)

# புலம்பெயர் சிற்றிதழ்களின் அரசியல்

01

### செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

**அறிமுகம்**

இலங்கையில் 1980களிலிருந்து முனைப்புப் பெற்ற இனப்போராட்ட சூழலின் தாக்கத்தினால் வடக்கு கிழக்குப் பிரதேசம் உள்ளிட்ட பெருமளவான ஈழத்தமிழர்கள் மேற்குலக ஐரோப்பிய நாடுகளுக்கு புலம் பெயர்ந்து சென்றனர்.

இதனால் 'புலம்பெயர் இலக்கியம்' என்ற புதியதொரு வகைப்பாடு தமிழ் இலக்கியத்தில் கவனம் பெற்றது.

புலம்பெயர் இலக்கியச் செயற்பாடுகள் 80களிலிருந்து முன்னெடுக்கப்படுவதற்கு அங்கிருந்து வெளிவந்த சிற்றிதழ்கள் அடிப்படையாக அமைந்திருந்தன. இன்றுவரையான கணக்கெடுப்பின்படி 150ற்கும் மேற்பட்ட பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வெளிவந்துள்ளமை ஆய்வுகளினூடாக (1) (குணேஸ்வரன் .சு, 2008 அலைவும் உலைவும் - யாழ்ப்பாணம், திணைப்புனம் வெளியீடு. ப.45/ (இது பற்றி முனைவர் மு.செல்வக்குமாரன் 'ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம் தன்முக வாசிப்பு' 2008 ,காவ்யா வெளியீடு, நூலில் 60இற்கும் மேற்பட்ட சஞ்சிகைகள் வெளிவந்ததாக குறிப்பிட்டுள்ளார்பக்.18) )அறியப்படுகிறது. அவற்றுள் சிற்றிதழ்களின் அரசியலை உசாவுதலே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

**சிற்றிதழ்களும் வெளியீட்டாளர்களும்**

புகலிடச் சிற்றிதழ்களின் வெளியீட்டுக்கு முற்றிலும் தனிநபர் சார்ந்த செல்வாக்கு மட்டுமல்லாது அரசியல், சூழலியல், பண்பாடு ஆகியனவும் காரணமாக அமைந்தன. புகலிட மண்ணில் வாழ்ந்த ஈழத்தமிழர்கள் தங்கள் எண்ணங்களைப் பரிமாறிக் கொள்வதற்கு ஓர் ஊடகம் தேவைப்பட்டது. அவர்கள் சிறுசிறு குழுக்களாகவும் அமைப்புக்களாகவும் இணைந்து இலக்கியச் சந்திப்புக்களை நடத்தியுள்ளனர்.

அவற்றின் அடிப்படையில் சிற்றிதழ்களைக் கொண்டு வந்து அவற்றினூடாகத் தாயகம் பற்றியும் புகலிடம் பற்றியும் தமது வாழ்வு பற்றியும் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர்.

புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் எவ்வாறான தகுதிநிலையில் இருந்தார்கள் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது. புகலிடச் சிற்றிதழ்களை நடத்தியவர்கள் எல்லாம் இதழியலை ஒரு கற்கை நெறியை முறையாகக் கற்றுக் கொண்டு வந்தவர்கள் அல்லர். எழுத்துலக அனுபவமும் பத்திரிகை அனுபவமும் பெற்ற சிறிய வகுப்பினரே இவர்களுள் இருந்துள்ளார்கள். இவர்கள் தாம் சார்ந்த அரசியல் தளத்தைச் சேர்ந்தவர்களை இனங்கண்டு குழுவாகவே இயங்கத் தொடங்கினர்.

1. ஆயுதப் போராட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள்.

2. இலங்கை அரச படைகளின் அச்சுறுத்தலுக்கு ஆளானவர்கள்.

3. தமிழ்ப் போராளி இயக்கங்களின் முரண்பாடுகளில் சிக்கித் தப்பியவர்கள்.

இதனாலேதான் சிற்றிதழ்களை நடாத்தியவர்களில் அதிகமானவர்கள் அரசியலுடன் தொடர்புபட்டவர்களாக இருந்துள்ளார்கள். இவர்களுக்கு உயிரைக் காத்துக் கொள்வதே அப்போது முதற் தேவையாக இருந்தது. உழைப்புக்காகப் புலம் பெயர்தல் என்பது அடுத்தகட்டமாகவே இருந்தது. இந்தநிலையில் தான் இலக்கியமும் அரசியலும் தொடர்புபடலாயிற்று.

**சிற்றிதழ்களின் உள்ளடக்கமும் வடிவமும்**

1985 இல் மேற்கு ஜேர்மனியில் இருந்து வெளிவந்த "தூண்டில்" என்ற சஞ்சிகையே புலம்பெயர் படைப்பாளிகளிடம் இருந்து வெளிவந்த முதலாவது சஞ்சிகையாகக் கருதப்படுகின்றது. கவிதை, சிறுகதை, கட்டுரை, விமர்சனம், நூல் அறிமுகம், நிகழ்வுகளின் பதிவுகள், நாடகம், சினிமா, கேலிச் சித்திரம், ஓவியம்,வாசகர் கருத்து ஆகிய இலக்கிய வடிவங்களையும் வகைப்பாடுகளையும் புகலிடச் சிற்றிதழ்கள் உள்ளடக்கமாக் கொண்டிருந்தன.

சிற்றிதழ்கள் தமக்கெனத் தனித்துவமான வடிவத்தையும் கொண்டிருப்பது முறையான ஓர் ஒழுங்காகும். புகலிடத்திலிருந்து வெளிவந்தவற்றுள் முதலாவது அதனை வெளியிடுபவர்கள் யார் என்ற கேள்வி எழுகின்றது. தனிச்சுற்றுக்கு விடப்படும் இதழ்களாக அவை ஆரம்பத்தில் அமைந்திருந்தன.நிறுவனம் சார்ந்த பங்களிப்புடன் சில இதழ்கள் வெளிவந்துள்ளன. (2)(தென்னாசிய நிறுவனத்தின் பங்களிப்புடன் மேற்கு ஜேர்மனியிலிருந்து வெளிவந்த தூண்டில் சிற்றிதழ்) மற்றும் தனிநபர்களாலும் குழுக்களாலும் கொண்டு வரப்பட்டவையே அதிகம்.இவை அச்சுவடிவம் பெறுவதற்கு படிப்படியாக எடுத்த முயற்சிகள் கவனத்திற் கொள்ள வேண்டிய வையாகும்.

1. கையெழுத்துப் பிரதியாக (Hand Writing) எழுதப்பட்டு பின்னர் அவை பல பிரதிகளாக (Photo Copy) படியெடுக்கப் பட்டன.(உ+ம் :- தூண்டில்,அ,ஆ,இ புதுமை)

2. தட்டச்சுச் செய்யப்பட்டு (Typing) பின்னர் பல பிரதிகளாகப் படியெடுக்கப்பட் டன. (உ+ம்:- தேனீ, சுவடுகள்)

3) ஏற்கனவே அச்சில் (Print) வெளிவந்தவை தெரிவு செய்து வெட்டியெடுக்கப்பட்டு ஒரே அளவில் பிரதி செய்யப்பட்டன.(உ+ம்:- இரவல் தூண்டில்)

4) அச்சு வடிவம் பெற்றவை (உ+ம்:- 90களில் வெளிவந்த 'காலம்')

5) கணனியில் தட்டச்சுச் செய்யப் பட்டு பிரதியெடுக்கப்பட்டன. (உ+ம்:-90களில் வெளிவந்த பல சஞ்சிகைகள்)

6) கணனிப்பதிப்பு:- தற்போது வெளிவரும் சஞ்சிகைகள் எல்லாம்(உ+ம்:- யுகமாயினி, உயிர்நிழல், காற்றுவெளி, காலம், எதுவரை)

**சிற்றிதழ்களின் அரசியல்**

சிற்றிதழில் வெளியாகும் ஆசிரியர் தலையங்கம் அவற்றின் அரசியலை வெளிப்படுத்தப் போதுமானதாக இருப்பதைக் கண்டு கொள்ளலாம்.புகலிடத்திலிருந்து வெளிவந்த தேனீ, உயிர்ப்பு, கலப்பை ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர் தலையங்கத்திலிருந்து ஒரு பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது.


சுப்பிரமணியம் குணேஸ்வரன்
B.A(Hons),PGDE,M.Phil
ஆசிரியர்,
வ/மதியாமடு விவேகானந்தா வித்தியாலயம்.

"நாள் தோறும் யுத்த சூழ்நிலைகளில் மரணத்துடனும், பட்டினியுடனும் போராடிக் கொண்டும், அகதிகளாக அலைந்தபடியும், தமது கருத்துச் சுதந்திரத்தையும் முற்றாகப் பறிகொடுத்தும் இருக்கும் வடக்கு- கிழக்கு சாதாரண மக்களிடையே வெளிப்படையான முன்னெடுப்புக்களை மேற்கொள்வது கடினமாகவே இருக்கின்றது.

(தொடரும்)

# மிளகாயில் பீடைகளும் முகாமைத்துவமும்

12-II



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

### நாற்றழுகல்-நாற்றுமேடை பரிகரணம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

நாம் நாற்று மேடை தயாரிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இது வழமையாக ஒரு சில இடங்களில் பரம்பரையாக செய்யப்பட்டு வருகின்ற போதிலும் சிறந்த, வீரியமான நாற்றுக்களை அதிகளவில் பெற்றுக்கொள்ளும் நோக்கில் எம்மூரிலே ஆங்காங்கே நாற்றுமேடைகள் உருவாவதை ஊக்குவிக்க வேண்டும். இதன் மூலமாக சுய வருமானத்தை விருத்தி செய்து பெற்றுக் கொள்ள முடியும். நாற்று மேடைகள் தயாரிப்பது ஒரு கலை. அதற்குரிய தேவைகளுடன் தயாரித்து அதிலே விதைகளை தூவி சிறந்த நாற்றுக்களை வளர்த்து விற்பதன் மூலமாக குறுகிய காலத்திலேயே குறிப்பிட்ட வருமானத்தைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு உண்டு.

*கிராமந்தோறும் சிறந்த நல்ல விதைகளையும் வீரியமான நாற்றுக்களையும் உற்பத்தி செய்ய வழிகோலுவது இனியொரு பசுமைப்புரட்சியின் இன்னுமொரு நோக்கமாகும். எமக்குத் தேவையான விதைகளையும் நாற்றுக்களையும் நாமே முழுவதுமாக உற்பத்தி செய்து பயன்படுத்தத் தொடங்கும் போதே எங்களூர் விவசாயத்தின் வளர்ச்சியிலும் அபிவிருத்தியிலும் இன்னொரு பரிமாணத்தை எட்டி நிற்போம்.*



எங்களுக்குள்ள வளங்களை சரியாக இனங்கண்டு அவற்றை எமது தேவைகளுக்காக எளிய தொழில் நுட்பங்களை உள்வாங்கி விவசாய அபிவிருத்தியென்னும் இலக்கை எட்டுவதற்கு அனைவரும் ஒருமித்து முயற்சிக்க வேண்டும். இளைஞர், யுவதிகளை விவசாய செய்கையிலே விரும்பியழைத்து வரும் நிலைக்கு விவசாயம் அகலக்கால் பதித்து ஒரு முன்னோடியான சமூக அந்தஸ்துள்ள தொழிலாக நிலையுயர வேண்டும்.

### நாற்றுமேடையைத் தயார் செய்தல்

நாற்றுமேடையை தயார் செய்யும் போது பல விடயங்களை கவனத்திற் கொள்ளுதல் சிறந்தது. நாற்றுமேடை சரிவர அமைக்காது விட்டால் பின்னர் அதில் நாற்றுக்கள் வளரும் போது நாற்றுக்கள் வீரியமில்லாது நலிந்தவையாக இருக்கும். இவ்வாறாக நலிந்தவைகளை விளைநிலத்தில் நடுகை செய்யும் போது சிறந்த விளைச்சலைத் தரமாட்டா. நோய், பூச்சித்தாக்கம் ஏதுமற்ற நாற்றுக்களை உருவாக்குதலே இங்கு முக்கியமானதாகும்.

நாற்று மேடை அமைக்கும் போது விளை நிலமாயின் அதிலேயுள்ள ஓர் உயரமான இடத்திலே அமைத்தல் பொருத்தப்பாடானது. உயரமான இடமாயின் நீர் வடிந்தோடுவதற்கு ஏதுவாயிருக்கும். நாற்று மேடையில் எக்காரணங்கொண்டும் நீர் தேங்கியிருக்க விடக்கூடாது. அதிகரித்த ஈரத்தன்மை நோய்க் காரணிகளின் முதன்மையானதான பூஞ்சணங்களின் விருத்திக்கு வாய்ப்பினை வழங்கிவிடும். அத்துடன் விதை முளைத்தலுக்கும் முளைத்த விதை நிலத்தின் மேலெழும்புதலிலும் இப்பூஞ்சணங்களின் தொற்று தடையாகவே இருக்கும்.

### நாற்று மேடையை தொற்றுநீக்குதல் (Surface Heat Sterilization)

நன்கு நீர் வடிந்தோடும் இடத்தில் அமையப்போகும் நாற்றுமேடையில் வைக்கோல் மற்றும் தாவர பாகங்களைப் பரவி எரியூட்ட வேண்டும். இதன் மூலம் நிலமேற்பரப்பிலேயுள்ள நோய்க்காரணிகள், பூச்சிகள், அவற்றினது ஏனைய பருவங்கள் ஆகியவற்றை Heat Sterilization எரியூட்டல் மூலம் அழித்துவிடலாம். இங்கே முக்கியமாக கவனிக்க வேண்டியது யாதெனில் நாற்றுமேடையின் மேற்பரப்பை தொற்று நீக்குவதற்காகப் பயன்படும் இலைகுழைகள் நோய்த்தாக்கத்திற்குள்ளானதாக இருக்காதவாறு பார்த்துக் கொள்ளவேண்டும். இல்லையெனில் நாமே வலிந்து நோயை உருவாக்க உதவி செய்ததாகவும் பின் அந்த உபத்திரவத்தினுள் உழல வேண்டியிருக்கும் அல்லவா!



நாற்று மேடைக்கு நன்றாக உக்கிய கூட்டுரத்தை இடுதல் சிறந்தது. உக்கிய கூட்டுரம் 1 பங்கு, மணல் மண் 1 பங்கு இதனுடன் நாற்று மேடைக்குரிய மண் 1 பங்கு என கலந்து மேடையைத் தயார் செய்யலாம். புதிய மாட்டெரு, சாணம் அல்லது அரைகுறையாக உக்கிய தாவர விலங்குக் கழிவுகளை நாற்று மேடைக்கு பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

### நாற்று மேடையை தயாரிப்பதில் கவனிக்க வேண்டியன

நாற்று மேடையினுள் இடவேண்டிய கூட்டுரத்தை தனியாக இடாது அதற்கு இன்னுஞ் சிலவற்றையும் சேர்த்து இடுதல் நன்று.

நோய்க் காரணிகளும் பூச்சி மற்றும் சிற்று ண்ணி பீடைகளும் இங்கே உள்வர சாத்தியக்கூறு இருப்பதனால் நாற்று மேடையில் இடும் கூட்டுரத்தினுள் *ரைக்கோடேர்மா* போன்ற நோய்க்காரணிகளை கட்டுப்படுத்தும் விவசாயியின் நண்பனான பூஞ்சணங்களைப் பயன்படுத்தலாம். இப் பூஞ்சணத்தை நாமே வளர்த்துப் பயன்படுத்தும் எளிய தொழில்நுட்பம் கைவசம் உண்டு.

நாற்று மேடையில் விதைகளை இடுவதற்கு முன்பு அவற்றை விதைநேர்த்தி செய்வது அவசியம். விதை நேர்த்தி செய்வதற்கு பூஞ்சண நாசினிகளான கப்ரான், திராம் ஆகியவற்றைப் பயன்படுத்துவார்கள். இவற்றுடன் மேலே குறிப்பிட்டதைப் போன்று *ரைக்கோ டேர்மா* ஆகிய பூஞ்சணங்களையும் பயன்படுத்தலாம். பூஞ்சண நாசினிகளைப் பயன்படுத்துவதற்கும் நன்மை தரும்.


பூஞ்சணங்களைப் பயன்படுத்துவதற்கும் வேறுபாடு உண்டு. பூஞ்சண நாசினிகள் தீங்கு விளைவிக்கும் நோய்க் காரணிகளான நுண்ணங்கிகளினை வெறுமனே கட்டுப்படுத்துவதுடன் சரி. ஆனால் நன்மை தரும் *ரைக்கோடேர்மா* பூஞ்சணம் இவ்வாறான பூஞ்சண நோயாக்கிகளைக் கட்டுப்படுத்துவதுடன் பயிரின் வேர்த் தொகுதியைச் சுற்றிவர விருத்தியடைந்து பல்கிப் பெருகி வேருக்கு தேவையான நுண்ணூட்டச்சத்தினை இலகுவில் பெற வழி செய்து கொடுப்பதுடன் வேர்த் தொகுதிக்கு பாதுகாப்பு அரணாகவும் இருக்கும்.

நாற்று மேடையில் பூச்சி நாசினிகள் பிரயோகிக்க வேண்டிய தேவையும் உண்டு. மணல்பாங்கான இடமாயினுஞ்சரி, எறும்புகளின் நடமாட்டம் அதிகமாக இருக்குமிடமாயினுஞ்சரி இவற்றை கட்டுப்படுத்த *குளோர்பைரிபொஸ்* இனைப் பயன்படுத்தலாம். இவற்றுடன் வேப்பிலை, நொச்சியிலை என்பனவும் பயன்தரும்.

நாற்று மேடைக்கு மண்புழு உரத்தை இடுவதில் அவதானம் தேவை. மண்புழு உரத்துடன் அதனது முட்டை தாங்கும் உறை (Cocoon)செல்ல வாய்ப்புண்டு.

இதனால் இளம் மண் புழுக்கள் நாற்று மேடையை ஊடறுத்து சுற்றித் திரிய வாய்ப்புள்ளதனால் நாற்றுக்களை அவற்றின் வேர்த்தொகுதியை தொந்தரவு செய்ய வாய்ப்பு உண்டு. இவ்வாறான சந்தர்ப்பங்களில் நாற்று மேடைக்கு வேப்பம் இலைகளை பரவி விடலாம். வேப்பம் இலையிலுள்ள இரசாயனப் பொருளான அசாடிரக்டின் மண்புழுவின் விருத்திக்கு பாதகமானது.

(தொடரும்)



சொண்ட் நிறுவனத்தினால் ஊர்காவற்துறைப் பிரதேசத்தில் தெரிவுசெய்யப்பட்ட 8 கிராமங்களிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் முதற்கட்டபட பயிற்சி வகுப்பொன்று அண்மையில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.இதில் ஊர்காவற்றுறை பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் த.கிருபைநாதன், சொண்ட் நிறுவன நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்துராசா ஆகியோர் உரையாற்றுவதையும் இதில் கலந்துகொண்ட இளைஞர், யுவதிகளையும் படங்களில் காணலாம்.

## நிலக்கண்ணிவெடி அகற்றும் பணிகளை பூர்த்தி செய்ய நீண்டகாலம் எடுக்கும்

### இராணுவம் அறிவிப்பு

வடக்கு , கிழக்கில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகளை அகற்றுவதற்கு நீண்ட காலம் தேவைப்படும் என இராணுவம் அறிவித்துள்ளது.

இதுவரையில் 1800 சதுரகீலோ மீற்றர் நிலப்பரப்பில் நிலக்கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் உபய மெதவல தெரிவித்துள்ளார்.

நிலக்கண்ணி வெடிகள் அகற்றப்பட்ட பிரதேசங்களை விடவும் அதிகளவான பிரதேசங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டியிருப்பதாக 90 வீதமான நிலக் கண்ணி வெடி அகற்றும் பணிகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# தங்கத்துரையின் மகன் கரிகாலனுக்கு தமிழகத்தில் நடந்த திருமணம்


தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன்... ஈழத்தமிழர் போராட்ட வரலாற்றில் இந்த மூன்று பெயர்களையும் யாரால் மறக்க முடியும்? சிங்கள இனவெறியின் கோர அடையாளங்களாக மூன்று உயிர்களும் வரலாற்றில் பதிந்து விட்டன. மூன்று குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் வெவ்வேறு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்றுவிட, தங்கத்துரையின் குடும்பம் தமிழ்நாட்டில் வசித்தது. தங்கத்துரையின் மகன் கரிகாலனுக்குக் கடந்த வாரம் சென்னையில் திருமணம்!

வெலிக்கடை சிறைக் கலவரத்தில் மோசமான சித்திர வதையால் தங்கத்துரை கொல்லப்பட்ட பிறகு, அப்போது தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த எம்.ஜி.ஆர்., தங்கத்து ரையின் குடும்பத்துக்கு அரசு சார்பாக நந்தனத்தில் வீடு வழங்கி ஆதரவு அளித்தார்.தங்கத்துரையின் மனைவி நமவணி, தனது ஒரே மகனைப் படிக்கவைத்துக்கொண்டு இங்கேயே இருந்தார். தமிழகத்திலும்,இலங்கையிலும், லண்டனிலும் படித்த தங்கத்துரையின் மகன் கரிகாலன், இப்போது லண்டனில் ஒரு தனியார் நிறுவனத்தில் பணி புரிகிறார். தர்சனா என்ற லண்டனில் வசிக்கும் ஈழத் தமிழ்ப் பெண்ணுக்கும் கரிகாலனுக் குமான திருமண விழாவில் எங்கும் ஈழத் தமிழ்வாசம் பல்வேறு நாடுகளில் இருந்தும் குவிந்திருந்த உறவினர்கள், உறவுகளைச் சந்தித்து உணர்வுகளைப் பரிமாறிக் கொண்டனர்.

பார்க் ஹோட்டலில் தங்கியிருந்த கரிகாலனை அடுத்த நாள் சந்தித்தபோது அமைதியாகப் பேசத் தொடங்கினார். "எங்களுக்குச் சொந்த ஊர் வல்வெட்டித்துறை . கடல் வணிகம் தான் தொழில். எங்க அம்மாவின் குடும்பத்தினர் மூன்று தலை முறைகளுக்கு முன்பே தமிழ்நாட்டுக்கு வந்துவிட்டனர். இந்தியக் குடியுரிமையுடன் இங்கு வசித்த அம்மாவை, அப்பா தமிழ்நாட்டில் தான் சந்தித்திருக்கிறார்.

போராட்ட நோக்கங்களுக்காக தமிழ்நாட்டுக்கு வந்துபோன போது அம்மாவுடன் பழக்கமாகி, இருவரும் காதல் திருமணம் செய்து கொண்டனர்.ஆனால், என் அம்மாவுடன் அப்பா சேர்ந்து குடும்பம் நடத்தியது வெறும் 10 மாதங்கள் தான். நான் பிறப்பதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே அப்பா மறுபடியும் இலங்கைக்குப் போய்விட்டார். நான் ஓர் இரவுகூட அப்பாவுடன் சேர்ந்து உறங்கியது இல்லை.


எனக்கு இரண்டரை வயது இருக்கும்போதுதான் அப்பாவைக் கைது செய்து வெலிக்கடை சிறைச்சாலையில் வைத்திருந்தனர். கம்பியின் அந்தப்பக்கம் அப்பாவும், இந்தப் பக்கம் என்னை வைத்தபடி அம்மாவும் நின்று இருந்ததாக அம்மா சொல்லக்கேட்டிருக்கிறேன். பிறகு,கொழும்பு நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டு இருந்த போது, அப்பா பொலிஸ் பாது காப்புடன் நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார்.


தங்கத்துரை

ஆனந்த விகடன்

அப்போது அவரைப் பார்த்துநான் கதறி அழுதேன். என்னைத் தூக்கிக் கொஞ்சுவதற்கு அப்பாவுக்கு அனுமதி அளித்தார் நீதிபதி.பிறகு, அப்பா என்னைக் கண்ணீருடன் தூக்கிக்கொண்டார். இவை எல்லாம் மசமசப்பான நினைவுகளாக இருக்கின்றன.இவ்வளவுதான் அப்பாவுக்கும் எனக்குமான தொடர்பு. அதன்பிறகு கொஞ்சநாட்களிலேயே அப்பா, மிகக் கொடூரமாகக் கொல்லப்பட்டுவிட்டார்.

## என் தந்தையை நீதிமன்றில் சந்தித்தபோது ஆற்றாது அழுதேன்


சிறுவயதில்...
கரிகாலன் மனைவியுடன்...

நான் பள்ளிக்கூடம் படித்தது முழுக்க முழுக்க சென்னையில் தான். கல்லூரி படிப்பதற்கு 99,2000 ஆகிய இரண்டு ஆண்டுகள் கொழும்பில் தங்கியிருந்தேன்.நான் இந்தியக் குடியுரிமை வைத்து இருந்ததால், தங்கத்துரையின் மகன் என்ற அடையாளமே தெரியாமல், படித்துமுடித்தேன்.

பிறகு, லண்டனுக்கு படிக்கப் போனேன். இப்போது கல்யாணம் . இதுவரையிலான, என் அமைதியான வாழ்க்கைக்கு ஆதரவளித்த தமிழகத் தலைவர்களுக்கு நன்றி!" என்கிற கரிகாலனுக்கு சிறையில் இருந்தபடியே அந்தப் பெயரை வைத்தவர் தங்கத்துரைதான்.

"லண்டனில் இயங்கும் பல்வேறு தமிழ் அமைப்புகளில் ஓர் அங்கத்தினனாக இணைந்து செயல்படுகிறேன். என் தந்தையின் உயிர்த் தியாகத்துக்குக் காரணமான ஈழத் தமிழரின் உரிமைப் போராட்டத்தைத் தொடர்ந்து கவனித்து வருகிறேன். இந்தப் போராட்டத்தின் மீது எத்தனையோ விமர்சனங்கள் இருக்கலாம். பலர் விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டதாகச் சொல்வார்கள். அப்படிக் கட்டாயத்தின் பேரில் இணைக்கப்பட்டு இருந்தால், நான்அதை ஆதரிக்கவில்லை.

ஆனால், புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களின் ஆதரவால்தான் இலங்கையில் போராட்டம் நடந்தது என்று சொல்வதை நான் ஏற்க வில்லை. அவர்கள் பணம் கொடுக்கலாம். ஆதரவாக இருக்கலாம். ஆனால், அவை எதுவுமே இல்லை என்றாலும், அங்கு போராட்டம் நடந்திருக்கும். அதற்கான தேவை அங்கு இருந்தது. தவிரவும், கோடி கோடியாக கொட்டிக் கொடுக்கப்படும் புலம்பெயர் தமிழர்களின் பணத்தைக் காட்டிலும் வன்னியில் சாகும் தமிழர்களின் உயிர் முக்கியமானது.


நான் கடைசியாக சமாதான காலத்தின் முடிவில் இலங்கைக்குப் போனேன். அதன் பிறகு போகவில்லை. இப்போது இலங்கையில் இருக்கும் தமிழ்மக்கள் அடிப்படை வசதிகள் கூடக் கிடைக்காத நிலையில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக் கின்றனர். சாப்பிட உணவும், வசிக்க ஒரு கூடாரமும், உடலை மறைப்பதற்குத் துணியும், தொடர்ச்சியான வருமானத்துக்கான தொழிலும்தான் அந்த மக்களுக்கான உடனடித் தேவைகள்.

ஈழத் தமிழர் பிரச்சினையில், பல்வேறு கருத்து முரண்பாடுகள் உள்ள அமைப்புகள் ஒன்றிணைந்து இன்னும் உண்மையாக, நியாயமாக உழைக்கவேண்டும். இலங்கையில் இன்னொரு ஆயுதப்போராட்டம் சாத்தியமா என்று கேட்டால், அதற்கு நேரடியாகப் பதில் சொல்ல முடியவில்லை. ஆனால், விதவிதமான துப்பாக்கிகள் மட்டுமே ஆயுதங்கள் இல்லை. அடிக்க வருபவரை நோக்கி கல் எடுத்து வீசுவதும் ஆயுதப் போராட்டம்தான். அப்படி ஓர் உரிமைப் போராட்டத்தை நான் வரவேற்கிறேன்.... ஆதரிக்கிறேன்!" என்றார்.

**பாரதி மகன்**

# பாதுகாப்பை கருத்திற் கொண்டு முக்கிய இடங்களில் இராணுவ முகாம்கள்

## கோத்தபாய அறிவிப்பு



தேசியப் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு நாட்டின் முக்கிய இடங்களில் இராணுவ முகாம்கள் அமைக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழித்ததன் மூலம் நாடு அடைந்துள்ள சமாதானத்தை நிலைநாட்டவும் தேசியப் பாதுகாப்பை வலுப்படுத்திக் கொள்ளவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.


இதன் ஓர் கட்டமாக தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதங்களை கடத்துவதற்காக பயன்படுத்திய மன்னார், முள்ளிக்குளம் பிரதேசத்தில் நிலையான கடற்படை முகாம் ஒன்று அமைக்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் முக்கிய பொறுப்பு கடற்படையினருக்கு காணப்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடற்படை முகாம் அங்குரார்ப்பண விழாவில் கலந்து கொண்டு உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மீள்குடியேற்றத்தின் போது பிரதேசங்களின் சனத்தொகைப் பரம்பலில் மாற்றம் ஏற்படுத்தக்கூடாது

## த.தே.வி.கூ.பொதுச் செயலாளர் சிவாஜிலிங்கம் வலியுறுத்து



13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அர்த்தமுள்ள வகையில் அமுல்படுத்துவதன் மூலம் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என தமிழ் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமாராவுடன் தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு நடத்திய சந்திப்பின் போது அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கைகளின் ஓர் கட்டமாக 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை அர்த்தமுள்ள வகையில் அமுல்படுத்த முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற வலயங்களில் மீள் குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டுமெனவும் வடக்கு , கிழக்கு மாகாணங்களில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொண்டு நிறுவனங்கள் கடமையாற்ற அனுமதிக்கப்படவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் மக்கள் குடியிருப்புக்கள் அமைந்துள்ள பிரதேசங்களில் இராணுவ முகாம்கள் நிறுவப்படக்கூடாது எனவும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளின் போது பிரதேசங்களின் சனத்தொகைப் பரம்பலில் மாற்றம் ஏற்படுத்தப்படக் கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை நாட்டில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையிலான முயற்சிகளுக்கு பூரண ஆதரவளிக்கப்படும் என்று நிருபமாராவ் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# சுதந்திர வர்த்தக வலயங்களில் 8 ஆயிரம் தொழில் வாய்ப்புகள்

கட்டுநாயக்க, பியகம, கொக்கல வலயம் உட்பட நாட்டின் 12 சுதந்திர வர்த்தக வலயங்களில் சுமார் 8 ஆயிரம் பேருக்கான வேலை வாய்ப்புக்கள் உள்ளதாக இலங்கை முதலீட்டு சபையின் மேலதிக பொது இயக்குனர் ஏ.எம்.சி.குலசேகர செய்தி ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்தார்.

பெரும்பாலும் ஆடைக்கைத்தொழில் சம்பந்தமான தொழில் வெற்றிடங்களே தற்சமயம் காணப்படுகின்றது எனவும் இவற்றினைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை துரித கதியில் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையின் முதலீட்டு வலயங்களை நகரங்களுக்கு அப்பால் கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# நீதிச்சேவை அதிகாரிகளின் அசமந்தத்தால் ஐந்து வருடங்களை சிறையில் கழித்த நபர்

(கொழும்பு)

நீதிச் சேவையினதும் நிர்வாக அதிகாரிகளினதும் கவனயீனம், பொறுப்பின்மை ஆகியன காரணமாக 5 வருடங்களுக்கு மேலாக தேவையின்றி சிறைக்குள் வாடிய நபர் ஒருவர் நேற்று முன்தினம் உயர் நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டார்.

இதுகுறித்து தெரியவருவதாவது, யக்கலையில் அம்பகஸ்பிட்டிய என்ற இடத்தைச் சேர்ந்த லியன ஆராச்சிகே அப்பு ஹாமிலாகே சாந்தலால் ஜயவர்த்தன என்ற பிரஸ்தாப நபர் 2002ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஒரு கொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்பட்டிருந்த வேளையில் பிணை செலுத்துவதற்கு பணமோ பிணையாளிகளோ கிடைக்காததால் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

ஆனால் 2005 ஆம் ஆண்டில் சட்டமா அதிபரின் சிபார்சின் பேரில் சந்தேக நபரை விடுவிக்குமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு உரிய முறையில் அனுப்பி வைக்கப்படாததால் அவர் தொடர்ந்தும் சிறைவாசம் அனுபவித்து வந்தார்.

கடந்தமாதம் சந்தேக நபர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இடம்பெற்ற தவறு கண்டுபிடிக்கப்ட்டதை அடுத்து சந்தேநபரை உடனடியாக விடுதலை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் இத்தகைய தவறு இனிமேலும் இடம்பெறாமல் தவிர்க்கும் வகையில் பொருத்தமான வழிகாட்டி விதிமுறைகளைத் தயாரிக்குமாறு நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர், நீதி அமைச்சின் செயலாளர், சிறைச்சாலை, புனர்வாழ்வு செயலாளர் ஆகியோருக்கு அறிவிக்குமாறு மேற்படி அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணை செய்த நீதியரசர்கள் சலீம் மஹ்ரூப், பி.ஏ. ரத்னாயக்க,எஸ்.ஐ.இமாம் ஆகியோர் சட்டமா அதிபரிடம் அறிவுறுத்தியுள்ளார்கள். (ஸ்ரீ-2)

# 04.09.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



## நிகழ்வுகள்

- 0476 - கடைசி ரோமப் பேரரசன் ரொமுலஸ் ஆகுஸ்டஸ் முடிதுறந்தான்.
- 1781 - லொஸ் ஏஞ்சல்ஸ் நகரம் ஸ்பானிய ஆளுநரான ஃபிலிப்பே டி நெவெ என்பவரால் அமைக்கப்பட்டது.
- 1884 - குற்றவாளிகளை அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸுக்கு அனுப்பும் கொள்கையை பிரித்தானியா கைவிட்டது.
- 1886 - 30 ஆண்டுகள் போரின் பின்னர் அப்பாச்சி பழங்குடிகளின் தலைவன் ஜெரனிமோ தனது படைகளுடன் அரிசோனாவில் சரணடைந்தான்
- 1888 - தான் கண்டுபிடித்த படம் பிடிகருவிக்கு ஜோர்ஜ் ஈஸ்ட்மன் கோடாக் என்பதை வர்த்தகக் குறியீடாக காப்புரிமை பெற்றுக் கொண்டார்.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: நேபாளம் ஜெர்மனி மீது போரை அறிவித்தது.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: ஐரோப்பியப் போரில் ஜப்பான் நடுநிலையை அறிவித்தது.
- 1951 - கண்டங்களுக்கிடையேயான முதலாவது நேரடித் தொலைக்காட்சி ஜப்பானில் இடம்பெற்ற அமைதி மாநாட்டில் இருந்து கலிபோர்னியாவின் சான்பிரான்சிஸ்கோ நகருக்கு ஒளிபரப்பப்பட்டது.
- 1956 - வன்தட்டு நினைவகத்தைக் கொண்ட உலகின் முதலாவது கணனியை ஐபிஎம் அறிமுகப்படுத்தியது.
- 1963 - சுவிஸ் எயார் விமானம் சுவிற்ஸர்லாந்தில் வீழ்ந்து நொருங்கியதில் அதில் பயணஞ் செய்த அனைவரும் (80) கொல்லப்பட்டனர்.
- 1970 - சல்வடோர் அலெண்டே சிலி நாட்டின் அதிபரானார்.
- 1971 - அலாஸ்காவில் போயிங் விமானம் ஒன்று வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த 111 பேரும் கொல்லப்பட்டனர்.
- 1972 - ஐக்கிய அமெரிக்காவின் மார்க் ஸ்பிட்ஸ் ஜெர்மனியின் மியூனிக் நகரில் இடம்பெற்ற 1972 ஒலிம்பிக் போட்டிகளில் நீச்சலில் ஏழாவது தங்கப் பதக்கத்தைப் பெற்று சாதனை படைத்தார்.
- 1978 - அண்ணா பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 1996 - கொலம்பிய புரட்சி இராணுவப் படையினர் கொலம்பியாவின் இராணுவ முகாமொன்றைத் தாக்கினர். மூன்று வாரங்கள் நீடித்த இப் போரில் 130 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - இஸ்ரேலின் டெல் அவீவ் நகரின் பாடசாலை ஒன்றின் அடியில் கிமு முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் ஒரு புதைகுழிக்குகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.
- 2007 - சூறாவளி ஃபீலிக்ஸ் நிக்கராகுவாவைத் தாக்கியதில் பலத்த நிலச்சரிவுகளும் உயிரிழப்புகளும் ஏற்பட்டன.

### பிறப்புகள்

- 1941 - சுஷீல்குமார் ஷிந்தே, தற்போது இந்தியாவின் மத்தியஅரசின் மின்துறை அமைச்சர்
- 1952 - ரிஷி கபூர், இந்திய நடிகர்
- 1971 - லான்ஸ் க்லூஸ்னர், தென்னாப்பிரிக்கத் துடுப்பாட்டக்காரர்
- 1981 - பியான்சே நோல்ஸ், அமெரிக்கப் பாடகி

### இறப்புகள்

- 2006 - ஸ்டீவ் ஏர்வின், அவுஸ்திரேலிய இயற்கை ஆர்வலர் (பி. 1962)

**1870-பிரான்ஸ் மன்னன் நெப்போலியன் பதவியிலிருந்து அகற்றப்பட்டான். அரசி யூஜின் தனது பிள்ளைகளுடன் இங்கிலாந்துக்குத் தப்பி ஓடினாள். மூன்றாவது குடியரசு அமைக்கப்பட்டது.**




# நல்லூரில் இலவசமாக நடைபெற்றுவரும் ஆரோக்கிய வாழ்வின் போசண வழிகாட்டல்

**நல்லூர் மஹோற்சவ காலத்தில் நல்லூர் முருகன் ஆலய மேற்கு வீதியில் நடைபெறும் போசண விழிப்புணர்வு வழிகாட்டல் கண்காட்சி மற்றும் பரிசோதனைகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.**

ஆரோக்கியமான ஒரு மனிதனின் வாழ்வில் முதன்மைக் காரணிகளில் ஒன்றாகத் திகழ்வது போசாக்கு ஆகும். இதனாலேயே எமது முன்னோர்கள் "உணவு அறிந்து உண்" என்று கூறி வந்தனர். அறிந்து உண்ணுதல் என்பது அந்த உணவின் தன்மை, தரம், போசாக்கு நிலை, உடலுக்கான பொருத்தப்பாடு என்ற பல விடயங்களை குறிக்கிறது.

இது அனைவருக்கும் தெரிந்த ஒன்று என்ற போதிலும் எத்தனை பேர் இதனைக் கடைப்பிடிக்கின்றோம் என்பது கேள்விக் குறியானதே.

இயந்திரமான இந்த வாழ்க்கைக் காலத்தில் எமது உணவு பற்றி துளி அளவு கூட சிந்திக்காமல் நாமும் இயந்திரமயமாகிக் கொண்டிருக்கின்றோம். அது மட்டுமல்லாமல் வேக உணவு (Fast Food) , நொறுக்குத் தீனிகள், நவீன உணவுகள்,சிற்றூண்டிகள் என எதனையும் உண்ணும் நிலையில் இருக்கிறோம். இவ்வாறாக போசாக்கு ரீதியில் எவ்வளவு பெரிய தவறுகளைப் புரிந்து கொண்டிருக்கிறோம் என்று யாரும் உணர்ந்து கொள்வதாகத் தெரியவில்லை.



வளரும் இளம் பராயத்தினரும் இவ்வாறான உணவு நிலை காரணமாக தீவிர குறை போசாக்கு நிலைக்கு ஆளாகின்றனர். இது எதிர்காலத்தில் ஒரு ஆரோக்கியமற்ற சமுதாயத்தையே உருவாக்கும். வளர்ந்தவர்களிலும் இது நோய்நிலைகளுக்கு உதாரணமாக நீரிழிவு, இருதய நோய்கள் போன்றவற்றிற்கு இட்டுச் செல்லலாம்.

எனவே எமது மக்களிற்கு ஆரோக்கிய வாழ்விற்கான போசணை வழிகாட்டலை, ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி ஒரு வளமான, ஆரோக்கிய சமுதாயமாக மாற்றுவதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பே யாழ்ப்பாண போசணைச் சமூகம்(JAFFNA NUTRITION SOCIETY) பல்துறை வல்லுனர்களால் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பானது மக்களிடையே போசாக்கு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவது மாத்திரமின்றி எமது சமூகத்திற்கு ஏற்ற சில நியமப் பெறுமானங்களை உருவாக்குவதேயாகும் (ஏனெனில் நாம் பின்பற்றும் சில பெறுமானங்கள் மேலைத்தேய நாடுகளிற்கு உரியவை ஆகும்)

கடந்த வருடம் உருவாக்கப்பட்ட இந்த அமைப்பானது தனது முதலாவது நிகழ்வாக சென்ற வருடம் நல்லூர் உற்சவகாலத்தின் போது இறுதி 10 நாட்களும் விழிப்புணர்வு நிகழ்வை நடத்தியிருந்தது. பெருமளவிலான மக்களின் வரவேற்பைப் பெற்ற இந்நிகழ்ச்சியில் ஏறத்தாழ ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் நேரடியாக இதன் பயனைப் பெற்றிருந்தனர்.

அதன் தொடர்ச்சியாக இம்முறையும் நல்லூர் உற்சவகாலத்தில் கடந்த 24.08.2010 தொடக்கம் இந்நிகழ்வு ஆரம்பிக்கப் பட்டுள்ளது. UNICEF இன் அனுசரணையுடன் நடைபெறும் இந்நிகழ்வு நல்லூர் பின் வீதியில் திருஞான சம்பந்தர் ஆதீனத்திற்கு முன்புறமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இம்முறை இந்நிகழ்வில் உள்ளடங்கியுள்ள விடயங்களாவன,

★ போசாக்கு தொடர்பான விளக்கப் படங்களுடன் கூடிய ஆலோசனை.

★ போசாக்கு மற்றும் நோய் நிலைகள் தொடர்பான ஒளி நாடா கண்காட்சி.

★ மருத்துவ பரிசோதனைகள்.

★ போசாக்கு தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் விநியோகம்.

இவ்வனைத்துச் சேவைகளும் முற்றுமுழுதாக இல வசமாகவே நடை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.



யாழ். மருத்துவ பீடத்தைச் சேர்ந்த முதலாம், இரண்டாம் ஆண்டு மாணவர்களினால் முன்னெடுக்கப்பட்டு இந்நிகழ்ச்சியில் முதலாவதாக குறித்த ஒருவரின் உயரம், நிறை என்பன அளக்கப் பட்டு அதற்குரிய உடற்திணிவு சுட்டி கணிக்கப்படுகிறது. பின்னர் அவர்களிற்கான குருதியமுக்கம் அளவிடப்பட்டு அதன் தன்மையும் அறியப் படுகிறது.

சில சந்தர்ப்பங்களில் உதாரணமாக கர்ப்பவதிகள், பெண்கள், பிள்ளைகள் போன்றோருக்கு குருதிச் சோகைக்கான பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றது.

அதனைத் தொடர்ந்து பின்வரும் தலைப்புக்களில் போசாக்குத் தொடர்பான ஆலோசனைகளும் விளக்கங்களும் வழங்கப்படுகின்றது.

- கர்ப்பகால போசாக்கு.
- கர்ப்பகால குருதிச் சோகை.
- கர்ப்பகால நீரிழிவு.
- தாய்ப்பால் ஊட்டலும் அதன் அவசியமும்.
- குறை நிரப்பு உணவுகள்.
- வளரும் பிள்ளைகளுக்கான போசாக்கு வளர்ச்சி.
- கட்டிளமை பருவத்தினருக்கான போசாக்கு.
- விளையாட்டு வீரர்களுக்கான உணவு.
- புரத குறை போசனை. (Protein mul nutrition)
- இரும்புச் சத்து குறைபாடு.
- நீரிழிவு.
- இருதய நோய்.
- முதியோர்களுக்கான போசாக்கு.
- ஆரோக்கியமான உணவு.
- உடற்பயிற்சியும் போசனையும்.

என்ற 15 வகையான தலைப்புக்களின் கீழ் நன்றாக பயிற்றப்பட்ட மருந்துவ மாணவர்களினால் விளக்கம் அளிக்கப்படுகிறது.

அத்துடன் நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், தாய்ப்பாலூட்டல் போன்ற பல விடயங்கள் தொடர்பான விளக்க விவரண ஒளிநாடா கண்காட்சியும் காண்பிக்கப்படுகிறது. மேற்குறிப்பிட்டவற்றில் சில விடயங்கள் தொடர்பான துண்டுப்பிரசுரங்களும் வழங்கப்பட்டு வருகிறது.

ஆசிரியர்கள், மாணவர்கள் போன்றவர்களிற்கு இது அவர்களது பாட ரீதியிலும் மிகவும் பயனுள்ள ஒன்றாகவே அமையும்.

ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவது நம் ஒவ்வொருவருடைய தலையாய கடமையாகும். அதுவும் குறிப்பாக கடந்த கால அனர்த்தங்களைத் தொடர்ந்து மீளக்குடியமர்ந்து வரும் முகாம்களில் தங்கியுள்ள மக்களின் குறை வருமானம் அல்லது வருமான மின்மை காரணமாக அவர்களால் போசாக்கான உணவை எடுக்க முடியாது போகின்றது. அத்துடன் இளம் சிறார்களில் தீவிர குறை போசணை நிலையும் ஏற்படுகிறது. இந்நிலையில் அவர்களின் நிலைக்கேற்ற போசாக்கான உணவை எடுப்பதற்கான வழிகாட்டல் அவசியமாகிறது. எனவே பல தரப்பட்ட மக்களும் கூடும் இவ்வாறான உற்சவ காலத்தின் போது இந்நிகழ்வை முன்னெடுக்கின்றோம்.

க.உதயசீலன்
நான்காம் வருடம்,
சமுதாய மருத்துவ துறை,
மருத்துவ பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

போதியளவு நிதிவசதி, இடவசதிகளும் கிடைக்குமிடத்து வெவ்வேறான இடங்களில் இந்நிகழ்வை மேற்கொள்வது சாத்தியமே.

எனவே இந்நிகழ்வை பார்வையிட்டு பார்வையாளர்கள் பயனடைவதுடன் இது போன்ற நிகழ்வை முன்னெடுப்பதற்கு ஆர்வலர்களையும் அனுசரணையாளர்களையும் எதிர்பார்க்கின்றோம்.

# முன்னாள் புலி உறுப்பினர்கள் 508 பேர் உறவினர்களிடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் 508 பேர் இன்று தமது பெற்றோர் மற்றும் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இதன்போது தொழிற்பயிற்சியை பூர்த்தி செய்த 180 முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு சான்றிதழ்களும் உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன.

பல்வேறு புனர்வாழ்வு முகாம்களில் புனர்வாழ்வளிக்கப்பட்ட வயது குறைந்தோர்,தாய்மார், உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியோர் மற்றும் அங்கவீனமுற்றோரே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளதாக அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சிவலிங்கம் சதிஷ்குமார் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் டி.யூ.குணசேகர, பிரதி அமைச்சர் விஜித முனி சொய்ஸா, அமைச்சின் செயலாளர் ஏ.திசாநாயக்க, அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் சதிஷ்குமார் மற்றும் புனர்வாழ்வு ஆணையாளர் பிரிகேடியர் சுனந்த ரணசிங்க ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர்.

இதன்போது புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களின் கலை நிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்பட உள்ளன. இதுவரை சுமார் 3 ஆயிரம் முன்னாள் புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-2)

# இவர்களைத் திருத்தவே முடியாதா?

(யாழ்ப்பாணம்)

ஆஸ்பத்திரி வீதி சத்திர சந்திக்கு மேற்கே உள்ள வீதியில் குப்பை கொட்டுவதற்கென எல்லை ஒன்று அமைக்கப்பட்டு அதில் கொட்டப்படும் குப்பைகள் யாழ். மாநகரசபையினால் அகற்றப் பட்டு வருகின்றது.



ஆனால் சில வர்த்தகர்கள் மற்றும் பொது மக்கள் குப்பைகளை குறித்த எல்லைக்குள் கொட்டாது வெளியே போட்டு விட்டு போவதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வீதியில் நடமாடும் கட்டாக்காலி நாய்கள் அவற்றை கிளறி அசுத்தப்படுத்துவதாகவும் இதனால் சூழல் மாசடைவதாகவும் வீதியால் செல்லும் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே நகரத்தை நரகமாக்காது சுற்றுச் சூழலை சுகாதாரமாக வைத்திருப்பது அனைவரினதும் கடமை என்பதுடன் குப்பை கொட்டுபவர்கள் யாராக இருந்தாலும் குப்பை கொட்டுவதற்கான எல்லைக்குள் கொட்டுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். (ஸ்ரீ-4)

# இலங்கை விவகாரத்தில் இந்தியா விரைந்து செயற்படமுடியாமைக்கு பல காரணங்கள் உள்ளன

## இந்திய வெளியுறவுச் செயலர் நிருபமாராவ் தெரிவிப்பு



இலங்கையில் வாழும் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு உதவ வேண்டும் என்ற கொள்கையில் இந்தியா தொடர்ந்தும் இருக்கிறது. ஆனாலும் இலங்கை அரசாங்கத்திற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் இருப்பதனால் எமது தலையீடுகளும் வரையறைக்கு உட்பட்டதாகவே இருக்கிறது என்று இந்திய வெளியுறவு செயலாளர் நிருபமா ராவ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அமுலாக்கல் மூலம் அல்லது சர்வகட்சிப் பிரதிநிதி குழுவின் அறிக்கையினை அமுல்படுத்துவதன் மூலம் தீர்வொன்றினை காணமுடியும். ஆனாலும் இவ்விடயத்தில் அவசரப்படுவதனால் எவ்விதப் பயனும் ஏற்படாது.

இலங்கை விவகாரத்தில் இந்தியா வேகமாக செயற்பட முடியாமைக்கு பல காரணங்கள் இருக்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய இல்லத்தில் நேற்று முன்தினம் முற்பகல் 11.45 மணிவரை நடைபெற்ற தமிழ்க் கட்சிகளின் அரங்க பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இந்த சந்திப்பின் போது கருத்துச் தெரிவித்த நிருபமாராவ்,

இலங்கை சிறுபான்மை தமிழ் மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இந்தியா உள்ளது. அதனையே தற்போது மேற்கொண்டு வருகின்றது.

இலங்கை விவகாரத்தில் இந்தியா வேகமாக செயற்படுவதற்கு பல தடைகள் இருக்கின்றன.

1987 ஆம் ஆண்டு இருந்த நிலைமை தற்போது இல்லை. எமது செயற்பாடுகள் வரையறுக்கப்பட்டவையாகவே தற்போது காணப்படுகின்றன.

இலங்கை அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பதை மறந்து விடல் ஆகாது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு இரண்டு விடயங்களில் தீர்வினை காணலாம். 13 ஆவது திருத்தத்தை அமுல் செய்வது அல்லது சர்வகட்சிகள் பிரதிநிதிகள் குழுவின் அறிக்கைகளை நடைமுறைப்படுத்துவது என்பவையே அவையாகும் என்று தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த ஜனநாயக மக்கள் முன்னணியின் செயலாளர் நல்லையா குமரகுருபரன், 13 ஆவது திருத்தச் சட்டம் இந்தியாவின் குழந்தையாகும்.

அதனை ஆரோக்கியமாக நடைமுறைப்படுத்த இந்தியா உதவ வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதற்குப் பதிலளித்த நிருபமாராவ் 13 ஆவது திருத்தச் சட்டத்திற்கு தற்போது வயது 22 ஆகிறது. இதனால் அது தன்பாட்டில் வளரும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தியா இலங்கையில் அமைக்கவுள்ள 50 ஆயிரம் வீடுகளில் 10 ஆயிரம் வீடுகள் மலையகத்தில் அமைக்கப்படும் என்றும் நிருபமாராவ் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# குருபூசை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீவைகுந்த கைலாஷ் ஆச்சிரமத்தின் சுவாமி முக்தானந்த சரஸ்வதி சுவாமி அம்மாவின் முதலாம் ஆண்டு குருபூசை இன்று சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 1 மணிவரை நடைபெறவுள்ளது.

இதில் சுவாமி அம்மாவின் அளவிலான திருவுருவச் சிலை பிரதிஸ்டை செய்தல், அன்பர்களால் எழுதப்பெற்ற சுவாமி அம்மாவின் வாழ்க்கை பற்றிய புத்தக வெளியீடும் மற்றும் ஆத்மீக நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. (ஸ்ரீ-4)

# படையினரால் மிதிவெடி அகற்றும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு கட்டளைத் தளபதி கத்துரு சிங்கவின் கட்டளைக்கிணங்க, படைத்தரப்பினால் மிதிவெடிகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதில் எதிர்வரும் 9,10 ஆம் திகதிகளில் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்படவுள்ளதால் நாகர் கோவில் பகுதிகளில் உள்ள வீதியோரங்களில் காணப்படும் மிதிவெடிகள் அகற்றப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-4-43)

# சவுதி அரேபியாவின் சட்டக் குறைபாடுகளை சாடுகிறது மனித உரிமைகள் கண்காணிப்பகம்

இலங்கைப் பணிப் பெண்ணைச் சவுதி அரேபியாவில் உள்ள வீட்டின் உரிமையாளர் சித்திரவதை செய்ததாகக் கூறப்படும் சம்பவத்திற்கு அந்த நாட்டுச் சட்டத்தில் நிலவும் குறைபாடுகள் மற்றும் துஷ்பிரயோகங்களுடன் கூடிய சுரண்டலும் காரணமென மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சவுதி அரேபியாவில் இலங்கைப் பணிப் பெண்ணின் உடம்பில் ஆணி செலுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக அவ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த இலங்கைப் பெண்ணுக்கு ஏற்பட்ட இம்சை தனிப்பட்ட ஒரு சம்பவம் மட்டுமல்லவென அவ் அமைப்பின் மத்திய கிழக்கு நடவடிக்கை தொடர்பான சிரேஷ்ட ஆய்வாளர் கிறிஸ்டோபர் வெலிக் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுப் பணிப்பெண்கள் சுரண்டப்படுவதும் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுவதும் கணக்கிட முடியாத அளவில் இடம்பெறுவதுடன் அவற்றில் ஒரு சம்பவமே இதுவெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் தொடர்பில் எந்தவொரு பயமுமின்றி பணிப்பெண்களைச் சித்திரவதை செய்வதற்கு இல்லத் தலைவர்களுக்கு அனுமதி கிடைக்கும் வகையில் அந்த நாட்டுச் சட்டக் கட்டமைப்பில் நிலவும் குறைபாடுகளைக் களைவதற்கு சவுதி அரேபிய அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது அவசியமென அவ் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

சவுதி அரேபியாவின் சட்டக் கட்டமைப்பின் ஊடாக ஆசிய நாடுகளைச் சேர்ந்த 15 இலட்சம் அளவிலான ஆசிய நாடுகளைச் சேர்ந்த வீட்டுப் பணிப்பெண்களுக்கான பாதுகாப்பு விலக்கப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக உடல் மற்றும் பாலியல் ரீதியான சுரண்டலுக்கு உள்ளாகும் சவுதி அரேபியாவில் பணிபுரியும் பணிப்பெண்கள் நிவாரணம் பெறுவதற்குப் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குவதாகவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றஞ்சாட்டியுள்ளது. (ஸ்ரீ-2)

### பூநகரி ப.நோ.கூ.சங்க கிராமிய வங்கியில்

# நிரந்தர வைப்பிலிடப்பட்ட பணத்தில் 50 வீதத்தை மட்டும் வழங்க முடிவு

(பூநகரி)

பூநகரி ப.நோ.கூ.சங்க நிர்வாகத்தினர் தமது சங்க கிராமிய வங்கியில் பூநகரி பகுதி மக்களால் நிரந்தர சேமிப்பில் வைப்பிலிடப்பட்ட பணத்தில் 50% மட்டும் வழங்குவதற்கு முடிவெடுத்துள்ளனர்.

போர் முடிந்து ஒரு வருடத்திற்கு மேலாகியும் தமது சேமிப்புப் பணம் இதுவரையிலும் வழங்கப்படாததால் அதனை வழங்கும் படி கோரிக்கை விடப்பட்டதை தொடர்ந்து ஒருவர் நிரந்தர வைப்பில் இடப்பட்ட பணத்தில் 50% மட்டுமே வைப்பில் இருந்து வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நிரந்தர வைப்பில் 50 இலட்சத்துக்கும் மேற்பட்ட பணம் வைப்பில் இடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, சாதாரண சேமிப்பில் மக்களால் இடப்பட்ட பணம் தங்களுக்கு கிடைக்காதா என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பாக இச் சேமிப்பில் இட்ட மக்கள் மேலதிகாரியோடு தொடர்பு கொண்டுள்ளனர் எனத் தெரியவருகிறது. (ஸ்ரீ-2)

# சர்வாதிகாரியாக மாறியுள்ளார் ஜனாதிபதி; மங்கள சமரவீர எம்.பி. குற்றச்சாட்டு

மஹிந்த சிந்தனை என்ற போர்வையில் ஒரு சர்வதிகாரியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாற்றமடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி பதவியை தொடர்வதாக கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது அவர் தெரிவிக்கவில்லை எனவும் அதனை புறந்தள்ளி தற்போது நீண்டகாலம் தொடர வழியேற்படுத்தியுள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயகத்திற்கு விரோதமான முறையில் வன்முறைகளைப் பயன்படுத்தி ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களை தனது அரசியல் யாப்பு மாற்றத்திற்கு சம்மதிக்க வைக்க முயற்சி எடுத்து வருவதாக அவர் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் மேலும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் லக்ஸ்மன் செனவிரட்ன, ஏர்ல் குணசேகரா ஆகியோர் அரசின் அரசியல் யாப்பு மாற்றத்திற்கு ஆதரவாக வாக்களிக்க தீர்மானித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஸ்ரீ-2)

# குடத்தனை கமநல சேவை நிலையத்தை மீள இயக்குவதற்கு நடவடிக்கை

வடமராட்சி கிழக்கு குடத்தனை கமநல சேவை நிலையம், பருத்தித்துறை பிரதேச சபையின் அம்பன் பகுதியில் உள்ள உப அலுவலகம் ஆகியவற்றை மீள இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

கடந்த கால யுத்த சூழ்நிலை காரணமாக இப்பகுதி உயர்பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இக்குறித்த பகுதிகளில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதால் அம்மக்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காகவே இவ் அலுவலகங்கள் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# இராணுவத்தினரின் ஏற்பாட்டில் வர்ணம் பூசும் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தினர் சிவில் அமைப்பினால் யாழ். போதனா வைத்திய சாலையை புதுப்பிக்கும் நோக்குடன், 512 ஆவது படைப்பிரிவின் அதிகாரியின் யோசனைப்படி, 20 ஸ்ரீலங்கா · பாதுகாப்புப் படையினரின் உத்தரவிடும் அதிகாரியின் வேண்டுகோளுக்கிணங்க கடந்த முதலாம் திகதி DIMO தனியார் நிறுவனத்தின் யாழ். கிளையினரால் யாழ்.போதனா வைத்திய சாலை சிகிச்சை பிரிவு கட்டட சுவர்களுக்கு வர்ணம் பூசப்பட்டது. (ஸ்ரீ-4)

# அடிக்கடி ஏற்படும் மின்வெட்டால் மக்கள் பெரும் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதிகளில் அடிக்கடி இரவு வேளைகளில் மின்சாரம் துண்டிக்கப்படுவதாக அப்பகுதி பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதில் தும்பளை, நெல்லண்டை, மணியகாரன்சந்தி, பருத்தித்துறை முனை ஆகிய பகுதிகளிலே மின்சாரம் மாலை 6 மணியிலிருந்து இரவு 9 மணிவரை துண்டிக்கப்படுகிறது.

இதனால் பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படுவதாக பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும் இம்மின்சாரத்தடை எதுவித முன்னறிவித்தலுமின்றி இடம்பெறுவதால் பொது மக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

எனவே மக்களின் தேவைகளை கருத்திற் கொண்டு மின்சார சபை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-4-43)

## சூப்பர் பக் கிருமி விவகாரம்

# 15 நாட்களுக்குள் விளக்கமளிக்குமாறு மருத்துவர்களுக்கு இந்தியஅரசு உத்தரவு

(டில்லி)

சூப்பர் பக் கிருமிகள் பற்றி ஆராய்ச்சி நடத்திய இந்திய மருத்துவர்கள் 8 பேருக்கு விளக்கம் கேட்டு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

சூப்பர் பக் என்னும் புதிய கிருமிகள் பற்றி இந்திய மருத்துவர்கள் அண்மையில் தகவல் தெரிவித்தனர். இதனையடுத்து இந்தியாவில் இந்த அபாயகரமான கிருமிகள் வெளிநாடுகளில் பரவி வருவதாக இங்கிலாந்து மருத்துவர்கள் குற்றஞ்சாட்டினர்.

இந்தப் பரபரப்புகள் தற்போது அடங்கியுள்ள நிலையில் இந்தக் கிருமிகள் குறித்து ஆய்வு செய்த இந்திய மருத்துவர்கள் 8 பேருக்கு அகில இந்திய மருந்துக் கட்டுப்பாட்டு அலுவலகம் விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

அதில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து இரத்த மாதிரிகள் சேகரித்த விதம், ஆய்வுகள் நடத்தப்பட்ட விதம் வெளிநாட் டுக்கு அனுப்ப ஒப்புதல் பெறப் பட்டுள்ளதா என்பன உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் குறி த்து 15 நாட்களுக்குள் விளக்கம் அளிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# 2015 இல் இந்தியாவில் இணையத்தள பயன்பாடு மும்மடங்கு அதிகரிக்கும்

## ஆய்வில் தகவல்

(பாஸ்டன்)

2015 ஆம் ஆண்டில் இந்தியாவில் இணையத்தள பயன்பாடு தற்போதைய எண்ணிக்கையை விட மூன்று மடங்கு அதிகரிக்கும் என அமெரிக்க ஆய்வு ஒன்று கூறுகிறது. அமெரிக்கா, பாஸ்டனில் உள்ள மேலாண்மை ஆலோசனை நிறுவனம் உலக அளவிலான இணையத்தள பயன்பாடு குறித்த ஆய்வை சமீபத்தில் நடத்தியது.

இன்டர் நெட்ஸ் நியூ பில்லியன் என்ற தலைப்பில் ஆய்வு முடிவு வெளியிடப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது கடந்த 2009 இல் பிரேசில், ரஷ்யா , இந்தியா , சீனா , இந்தோனேசியா (பிரிசி) ஆகிய நாடுகளில் 61 கோடி பேர் இணையத்தளத்தைப் பயன்படுத்தினர். அதில் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் மட்டும் எட்டு கோடியே 10 இலட்சம் பேர். உலக அளவில் இது 7 சதவீதம். 2009 ஆம் ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையில், ஒவ்வொரு ஆண்டும் இணையத்தளம் பயன்படுத்துவோர் எண்ணிக்கை இந்த நாடுகளில் 20 சதவீதம் அதிகரிக்கும். எதிர்வரும் 2015 இல் இந்தியாவில் இப் பயன்பாடு எண்ணிக்கை தற்போதைய எண்ணிக்கையை விட மூன்று மடங்கு அதிகரிக்கும்.

அதாவது 23 கோடியே 70 இலட்சம் பேர் இணையத்தளத்தை பயன்படுத்துவர். எதிர்வரும் காலத்தில் டிஜிட்டல் சந்தையை உருவாக்க உள்ள இளைஞர்கள் இடையில் இப் பயன்பாடு, ஆச்சரியம் அளிக்கும் வகையில் அதிகரிக்கவுள்ளது.

அமெரிக்கா , ஜப்பானை விட இந்தியாவின் இணையத்தளச் சந்தை மிகவும் வித்தியாசமானது. அதிக பக்குவமில்லாத அதே சமயம் நன்கு வளர்ச்சி கண்ட சந்தையாக இந்தியா உள்ளது. பெரிய நகர்களில் மட்டும் இணையத்தள வசதி உள்ளது. ஆனால் சிறிய கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்து இங்கு குடியேறும் மக்களுக்கு இதனை முழுவீச்சில் பயன்படுத்தத் தெரியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மாவோயிஸ்ட்டுகளால் கடத்தப்பட்ட 4 பொலிஸாரில் ஒருவரின் உடல் மீட்பு

## பீகாரில் பதற்றம்

(பாட்னா)

பீகார் மாநிலத்தில் மாவோயிஸ்டுகளால் கடத்தபட்ட 4 பொலிஸாரில் ஒருவரின் உடல் மீட் கப்பட்டுள்ளது.

பீகார் மாநிலம் லக்கிசாலை மாவட்டத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று பாதுகாப்புப் படையினர் நடத்திய பசுமை வேட் டையின்போது மாவோயிஸ்டுகளுடன் நிகழ்ந்த மோதலில் 8 பொலிஸார் கொல்லப்பட்டனர். 4பேரை மாவோயிஸ்டுகள் பிணைக் கைதிகளாகப் பிடித்துச் சென்றனர். தங்கள் சகாக்கள் 8 பேரை சிறையில் இருந்து விடுவித்தால் மட்டுமே பிணைக்கைதிகளை விடுவிக்கப் போவதாக அவர்கள் மிரட்டல் விடுத்தனர்.


இதனையடுத்து கெடுவை மூன்று முறை நீடித்த அவர்கள் பின்னர் தங்கள் கோரிக்கை நிலைவேறாத நிலையில், பிணைக் கைதிகளில் ஒருவரை நேற்றுமுன்தினம் உதவி பொலிஸ் உத்தியோகத்தர் அபய்பிரசாத் யாதவ் என்பவரை கொடூரமாக சுட்டுக் கொன்றதாக மாவோயிஸ்டுகள் தெரிவித்தனர். இந்நிலையில் காட்டுக்குள் உடல் ஒன்று நேற்றுக்காலை கண்டெடுக்கப்பட்டது.

மாவோயிஸ்டுகள் கடத்தி வைத்துள்ள 4பேரில் ஒருவரான உதவிப் பொலிஸ் உத்தியோகத்தர் லூகாஸ் டெடெ என்பரவது உடல் என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் மாவோயிஸ்ட்டுகள் கொன்றுவிட்டதாகக் கூறிய அபய்பிரசாத் யாதவ் குறித்து தற்போது சந்தேகம் எழுந்துள்ளதால் அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



காஷ்மீர் மாநிலத்தில் பிரிவினைவாதிகளால் போராட்டம் தொடர்ந்து நடந்துவருகிறது. அதில் இராணுவவீரர்களும், மக்களும் பலியாகி வருகின்றனர். மத்திய அரசு போராட்டத்தை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக ஸ்ரீநகரில் இராணுவத்தினர் அணிவகுப்பு நடத்தினர்.

# நடிகர் ரஜனிகாந்த் இல்லத் திருமணவிழா பிரபலங்கள் நேரில் சென்று வாழ்த்து



(சென்னை)

நடிகர் ரஜனிகாந்தின் இல்லத் திருமண விழா சென்னை எலும்பூரில் உள்ள திருமண மண்டபத்தில் நேற்று கோலாகலமாக நடைபெற்றது. பிரபலங்கள் பலர் நேரில் சென்று வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

நடிகர் ரஜனிகாந்தின் இளைய மகள் சௌந்தர்ஜாவுக்கும் சென்னையைச் சேர்ந்த தொழிலதிபர் ராம்குமார் மகன் அஸ்வினுக்கும் சென்னையில் நேற்று திருமணம் கோலாகலமாக நடைபெற்றது.

வைதீக முறைப்படி நடைபெற்ற இந்த விழாவில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். மணவிழாவிற்கு வந்திருந்தோர்களை ரஜனியும் அவரது மனைவி லதாவும் வரவேற்றனர்.

விழாவில் கலந்து கொண்ட மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ, தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல் திருமாவளவன், எம்ஜிஆர் கழகத் தலைவர் ஆர்.எம். வீரப்பன், பா.ஜ.க மூத்த தலைவர் இல.கணேசன் உள்ளிட்ட திரளான அரசியல் தலைவர்கள் மணமக்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.

மேலும்இயக்குனர் பாலசந்தர், மணிரத்னம், கே.எஸ் ரவிக்குமார், நடிகர்கள் கமலஹாசன், பிரபு, பாக்கியராஜ், சிரஞ்சீவி, மற்றும் நடிகைகள் ஐஸ்வர்யாராய், ராதிகா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர். (ஸ்ரீ-2)

## பாரதச் செய்திகள்

# மீனவர்களின் நலனுக்காக கச்சதீவு பிரச்சினையில் வழக்குத் தொடர்ந்தேன்

## கருணாநிதிக்கு ஜெயலலிதா பதில்

தமிழக மீனவர்களின் நலனுக்காகவே கச்சதீவு பிரச்சினையில் வழக்குத் தொடர்ந்தேன் என்று கருணாநிதிக்கு ஜெயலலிதா பதிலளித்துள்ளார்.

இது குறித்து அதிமுக பொதுச் செயலாளர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கச்சதீவை இலங்கைக்கு தாரைவார்த்த நடவடிக்கையை கண்டித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக கருணாநிதி கூறியிருக்கிறார். கச்சதீவு 26.06.1974 அன்று தாரைவார்க்கப்பட்டு விட்டது. ஆனால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 21.08.1974 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதாவது இரண்டு மாதங்கள் கழித்துத் தான் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறார் கருணாநிதி.

1991 ஆம் ஆண்டு கச்சதீவை மீட்பேன் என்று நான் முழக்கமிட்டதை கருணாநிதி குறிப்பிட்டு என்ன நடவடிக்கை எடுத்தேன் என்று வினவியிருக்கிறார். கச்சதீவைப் பொறுத்தவரையில் மத்திய அரசு தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர மாநில அரசிற்கு எந்த அதிகாரமும் கிடையாது .கச்சதீவு மீட்பு குறித்துஅன்றைய பாரதப் பிரதமராக இருந்த பி.வி.நரசிம்மராவ் பின்னர் பிரதமர்களாக இருந்த வாஜ்பாய் மற்றும் மன்மோகன் சிங் ஆகியோரிடம் நான் கடிதம் மூலமாகவும் நேரிலும் பல முறை வலியுறுத்தி இருக்கிறேன்.

1991 ஆம் ஆண்டுதொடக்கம் 1996 ஆம் வரை ஆண்டு நான் முதலமைச்சராக இருந்த போது தமிழ்நாட்டின் உரிமைகளான கச்சதீவு மற்றும் காவிரி நதிநீர்பங்கீடு ஆகியவற்றை நான் திரும்பத் திரும்ப வலியுறுத்தியதால் தான் மத்திய அரசு எனக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியது என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தற்போதும் மீனவ சமுதாய மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையேயான கச்சதீவு தாரை வார்ப்பு ஒப்பந்தம் அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்று அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தி உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறேன் என்பதை இந்தச் சமயத்தில் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)

உண்மை ஊடுருவும் சூரிய ஒளி போன்றது.
அதை யாராலும் மூடிமறைக்க முடியாது.
~ மில்டன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# இந்துக் கடவுளர் தம்நிலை உணர்வரோ

இலங்கையில் கௌதம புத்தபிரானுக்கு முன்னுரிமை, முதலிடம். அவர் நினைத்தால் எங்கும் குடியேறலாம். அந்தளவிற்கு கௌதம புத்தபிரானின் சக்தி பலம் மிக்கதாகவுள்ளது.

புத்தபிரானின் சக்தியை வெல்லும் சக்தி உமைக்கும் கிடையாது. உமையைத் தன் பாகத்தில் வைத்திருக்கும் சிவனுக்கும் கிடையாது.

நல்லூர்க் கந்தன் உதவுவான் என்று நம்பினோம். அவனும் தென் பகுதி அப்பிளுக்கும் ஆரஞ்சுக்கும் ஆசைப்பட்டு விட்டான் போலும்.

மாம்பழத்திற்காக மலையேறியவனுக்கு அப்பிள், ஆரஞ்சு நன்றாகப் பிடித்திருக்கும். அதனால் அவன் வீதியெங்கும் புத்தபிரானின் புதல்வர்கள் ஆக்கிரமித்து விட்டனர்.

தமிழர்களுக்குத்தான் கொள்கை இல்லையென்றால், தமிழ்க் கடவுளர்களுக்கும் கொள்கை இல்லாமல் போனமை வேதனைக் குரியதே. இப்போது இந்துக் கடவுளர்கள் தங்கள் நிலையை உணரத் தொடங்கியுள்ளனர்.

நல்லூர் வேலன், ஆறுமுக நாவலனை அழைத்துள்ளான். உன் போன்ற வைராக்கியத் தமிழ்த் தலைவன் இருந்தால் மட்டுமே தமிழையும் சைவத்தையும் காக்க முடியும் என்பது முருகனின் முடிபு போல் தெரிகிறது.

இருந்தும் நாவலனை புதிய மண்டபத்திற்கு மாற்றுவதென்ற முடிபு இருப்பதாகத் தகவல்.

ஏதோ! நல்லூர் தெற்கு வீதியில் நாவலருக்கான புதிய மண்டபத்தை அமைப்பது வருங் காலத்தில் அதிகரிக்கக் கூடிய அடியார் தொகைக்கு இடைஞ்சல்போல் தெரிகிறது.

தற்போது இருக்கின்ற நாவலர் மணி மண்டபத்தின் எல்லைகளை அகற்றிவிட்டு மணி மண்டபமும் அதில் நாவலரும் என்றளவில் அந்த மணி மண்டபத்தைப் பேணுவது பொருத்தம் என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஏனைய நிலப்பரப்பு அத்தனையும் கோவிலுக்குச் சேர்வதும் தற்போது ஆலயத் தெற்கு வீதியில் உள்ள காணியை தூய்மைப் படுத்தி அதில் அடியார்கள் ஆற அமர இருப்பதற்கும், அங்குள்ள கற்பகதருக்களின் சிரசை அழகுபடுத்தினால் ஆலயச் சூழலில் அழகு மிளிரும் என்பதும் நம் சிற்றறிவு.

எதுவாயினும் நல்லூர்க் கந்தனின் கட்டளைப்படி மாப்பாணர் செயற்படுவார் என்பதால் இந்த விடயத்தை அப்படியே விட்டுவிடலாம்.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சேகரித்த கோடிக்கணக்கான நிதி புலிகளிடம்

## புலனாய்வுத்துறை நீதிமன்றில் தகவல்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் வெளிநாடுகளில் சேகரித்த கோடிக்கணக்கான பணத்தை விடுதலைப் புலிகளின் முன்னணித் தலைவர்களுக்கு வழங்கியுள்ளமை குறித்து தகவல்கள் கிடைத்துள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சேகரித்த பணத்தை விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், அதன் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் கிழக்கு மாகாண தளபதிகளாக செயற்பட்ட பானு, சொர்ணம் ஆகியோருக்கு வழங்கியுள்ளதாக இதுவரை மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவினர் கூறியுள்ளனர்.

இலங்கை மத்திய வங்கியின் நிதிதொடர்பான புலனாய்வுப் பிரிவின் பிரதான நிறைவேற்று அதிகாரி ஜோர்ஜ் நெவில் பெர்ணான்டோ கடந்த 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் 9 ஆம் திகதி மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மேற்கொண்ட நீண்டநாள் விசாரணைக்குப் பின்னர் புலனாய்வுப் பிரிவினர் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

இந்த வழக்கு கொழும்பு மேலதிக நீதவான் அலெக்ஸ் ராஜா முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்னணி செயற்பாட்டாளர்களான கந்தையா குஞ்சிததாசன், இளையதம்பி செல்வச்சந்திரன் ஆகியோர் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்பட்டிருந்தனர்.

தமக்குக் கிடைத்த பணத்தை தமிழ் மக்களின் மேம்பாட்டிற்குப் பயன்படுத்துவதாக புனர்வாழ்வு கழகம் தொடர்ந்தும் கூறிவந்தபோதிலும் அந்த அமைப்புக்கு கிடைத்த பணம் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்திருப்பதாக புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில் புனர்வாழ்வுக் கழகம் வெளிநாடுகளில் இதற்கு எதிராக பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவதாக அறியக் கிடைத்துள்ளது எனவும் இந்த அமைப்பு குறித்து இதுவரை மேற்கொண்ட விசாரணைகள் தொடர்பான அறிக்கையை சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பி வைத்துள்ளதாகவும் புலனாய்வுப் பிரிவினர் கூறியுள்ளனர்.

இந்த வழக்குத் தொடர்பான துரிதமான சட்டமா அதிபரின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளுமாறு உத்தரவிட்ட மேலதிக நீதவான் சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளார். (ச-5)

# ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பயன்படுத்தும் வாகனங்களின் பெறுமதி ரூபாய் 241 கோடி

ஜனாதிபதி மகிந்தவின் வாகனங்களின் பெறுமதி 241 கோடி ரூபாய் எனவும் அதனைக் கட்டுப்படுத்தியிருந்தால் வன்னி மக்களுக்கான மீள் குடியேற்றத்தை விரைவாக மேற்கொள்ள முடியும் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை சனநாயக குடியரசின் மேதகு ஜனாதிபதியாக 2006-ம் ஆண்டு மகிந்த தேர்ந்தெடுக்கப்பட்டபோது ஜனாதிபதியின் பாவனைக்காக இருந்த வாகனங்களின் பெறுமதி மூன்று கோடியேஒன்பதுலட்சத்துபத்தாயிரம் ஆகும். அது 2009-ம் ஆண்டு இறுதியில் இருநூற்றி நாற்பத்தொரு கோடியே மூன்று இலட்சத்து நாற்பத்தாறாயிரம் ரூபாயாக அதிகரித்துள்ளது. இந்தத் தகவல்கள் யாவும் நிதி அமைச்சின் 2009ம் ஆண்டறிக்கையிலேயே வெளியாகியுள்ளது.

இந்த அறிக்கையின்படி 2009ம் ஆண்டில் அமைச்சரவை மற்றும் திணைக்களங்களுக்கு விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருக்கும் வாகனங்களுக்கான பெறுமதி தொன்னூற்று ஆறு கோடியே எழுபத்தைந்து இலட்சத்து முப்பத்திரண்டாயிரமாகும். கடந்த 20ம் திகதி கூடிய நாடாளு மன்றத்தில் ஆறு கோடி ரூபாய்க்கு பெறுமதியான வாகனங்கள் கொள்வனவு செய்வதற்காக இன்னுமொரு தொகை நிதி ஒதுக்கப்படுவதற்கான பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதன்மூலம் 12 வாகனங்கள் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இது வரவு செலவு திட்டத்திற்கு அப்பால் செல்லும் நிதி ஒதுக்கீடாகும். ஜனாதிபதியின் வாகனத் தொகுதியின் பெறுமதி 51 கோடி ரூபாய்க்கு வரையறுக்கப்பட்டிருக்குமானால் மிஞ்சுகின்ற 190 கோடி ரூபாயை பயன்படுத்தி வன்னியில் வீடில்லாதிருக்கும் மக்களுக்கு ஆயிரத்து 500 வீடுகள் அடங்கிய ஒரு கிராமத்தையே அமைத்து முடித்திருக்கலாம்.

ஜனாதிபதி முதல் முழு அரசாங்கமும் அரச அதிகாரிகளால் செய்யப்படும் இந்த வாகன செலவானது நமது நாட்டு பொருளாதாரத்திற்கு தாங்கிக் கொள்ள முடியாத பெரும் சுமையாகும். இந்த வாகனங்களில் பெரும்பான்மையானவை அதி சொகுசு வாகனங்களாகும். ஒரு லீட்டர் பெற் றோலில் 04 கிலோ மீட்டருக்கு அப்பால் செல்ல முடியாது. அதேபோன்று வாகனப் பராமரிப்பிற்கும் கோடிக்கணக்கான ரூபாய் விரயமாகின்றது. இவைகள் பற்றிய உண்மையான தகவல்கள் மூடி மறைக்கப்பட்டுள்ளது. (ச-5)

# அரசின் புதிய அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் சட்டவிரோதம்

## மங்கள சமரவீர விளக்கம்

அரசாங்கத்தின் புதிய அரசியலமைப்புத் திருத்தச் சட்ட மூலம் சட்டவிரோதமானது என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி இரண்டாம் தவணை சம்பந்தமாக உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்று விசாரிக்கப்பட்டு வரும் நிலையில், ஜனாதிபதியாக ஒருவர் இரண்டு தடவைகளுக்குமேல் பதவி வகிக்கும் வகையில் மாற்றங்கள் மேற்கொள்ள முயற்சிப்பது சட்டவிரோதமானதும் தார்மீகத்திற்கு எதிரானது என கூறியுள்ளனர்.


கடந்த ஜனாதிபதித் தேர்தலிலோ, பொதுத் தேர்தலிலோ ஜனாதிபதியோ, அரசாங்கமோ ஜனாதிபதியாக ஒருவர் பதவி வகிக்கக் கூடிய வரையறையை பொது தேர்தல், அரச சேவை, நீதி சேவை போன்ற ஆணைக்குழுக்களின் அதிகாரங்களை ஜனாதிபதிக்கு வழங்கப்போவதாகவும் மக்களிடம் உறுதியளிக்கவில்லை. அவ்வாறு மக்களிடம் வாக்குறுதியளிக்கப்பட்டிருந்தால் அதனை ஒப்புவிக்குமாறும் மங்கள சமரவீர அரசாங்கத்திற்கு சவால் விடுத்துள்ளார்.

மக்கள் புதிய அரசியலமைப்புத் திட்டத்தை வகுத்து பதவிக் காலத்தை அதிகரித்துக்கொள்ள இந்த அரசாங்கத்தற்கு ஆணையை வழங்கவில்லை. மக்கள் புதிய அரசியலமைப் புத் திருத்தங்களை ஏற்றுக்கொள்ளவில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் செல்லுபடியான மொத்த வாக்குகளில் அரசாங்கத்திற்கு மூன்றில் ஒரு வீதமே கிடைத்தன.

அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் இருக்கின்றபோதிலும் அது நாட்டு மக்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பிரதி நிதித்துவப்படுத்தவில்லை. தற்போது பல்வேறு வரப்பிர சாதங்கள் மற்றும் சிறப்புரிமைகளுக்காக சிலர் அரசாங்கத்துடன் இணைந்துவரும் நிலையில் ஜனாதிபதியின் சர்வதிகார பயணத்திற்கு எதிராக அதிருப்தியடைந்தவர்கள் அரசாங்கத்தில்இருக்கின்ற போதிலும் தமது நிலைப்பாடுகள் தொடர்பில் குரல் கொடுக்கும் அளவிற்கு அவர்களது முதுகெலும்பில் பலமில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரை அலரி மாளிகைக்கு வரவழைத்து சுற்றியும் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் அதிகாரிகளைக் காவலுக்கு அமர்த்தி கையை உயர்த்துமாறு கூறியதும் கையை உயர்த்திவிட்டு வெளியில் செல்லும்போது இதற்கு எதிராக ஏதேனும் நடவடிக்கை எடுக்க முடியாதா? என சுதந்திரக் கட்சியினர் எதிர்க்கட்சிகளிடம் கேட்பதாகவும் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## சுவாமி விவேகானந்தரின் அருள்வாக்கு




"நான்" என்பதை ஒழித்துவிடு. இழந்துவிடு. மறந்துவிடு. இறைவன் அவனுடைய செயல்களைச் செய்து கொள்ளட்டும். இது அவனுடைய கடமை. ஒதுங்கி இருப்பதைத் தவிர வேறு வேலை எதுவும் நமக்கு இல்லை. இறைவனது செயல் நிகழட்டும்.

உன்னை இகழும் மக்களை நீ வாழ்த்து. அவர்கள் உனக்கு நன்மை செய்வதாக நினைத்துக் கொள். உனக்கு தீங்கு செய்பவர்கள் தங்களுக்குத் தாங்களே தீங்கு விளைவித்துக் கொள்கிறார்கள்.

உன்னை வெறுக்கும் மக்களிடம் நீ செல். உன்னிடம் இருக்கும் அகந்தையை அவர்கள் அழித்துத் துரத்தட்டும். அது உன்னை இறைவனுக்கு அருகில் அழைத்துச் செல்லும்.

# ஒக்ஸ்போட் அகராதி இனி வெளிவராது; அதன் பதிப்பு நிறுவனம் அறிவிப்பு




தலையணை அளவில் இருக்கும் அகராதியின் பக்கங்களை புரட்ட யாருக்கு இப்போது நேரமிருக்கிறது. ஒன்லைனில் தட்டி அர்த்தம் பார்ப்பது அதிகரித்து விட்டதால் உலகப் புகழ்பெற்ற ஒக்ஸ்போர்ட் அகராதி இனி அச்சில் வெளிவராது என்று அதன் பதிப்பு நிறுவனம் அறிவித்துள்ளது.


ஆங்கில அகராதி என்றாலே ஒக்ஸ்போர்ட்டை தேடு என்று கூறுமளவு பிரபலமானது இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழக அச்சகம் வெளியிடும் அகராதி. ஆரம்பத்தில் 60 கிலோ எடை வரை இருந்த தலையணை அளவு புத்தகம் அது. நாளடைவில் சிறிதாகிவிட்டாலும் பொக்கெட் அகராதி முதல் பல தொகுதிகள் வரை என ஆங்கில ஆராய்ச்சியாளர்களுக்கு கைகொடுத்து வருகிறது.

கால மாற்றத்துக்கு ஏற்ப அந்த அகராதியும் டிஜிட்டல் வடிவமாக்கப்பட்டது. சந்தா கட்டி இணையத்தளத்தில் தேடி அர்த்தம் பார்த்துக் கொள்ளும் வசதி அளிக்கப்பட்டது. இப்போது புத்தகம் புரட்டுவது குறைந்து கணனி அல்லது லேப்டாப்பை பயன்படுத்துவதால் ஒன்லைன் ஒக்ஸ்போர்ட் அகராதிக்கு அமோக ஆதரவு கிடைத்துள்ளது.

ஒக்ஸ்போர்ட் அகராதி விற்பனை மளமளவென கடந்த சில ஆண்டுகளில் சரிந்து விட்டதால் அதை அச்சிடுவதை கைவிட ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக அச்சகம் முடிவு செய்துள்ளது. இதுபற்றி அது நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் ,

ஒன்லைன் அகராதிக்கு அதிக ஓடர்கள் வருகிறது. மாறாக அச்சு பதிப்பு விற்பனை குறைந்து விட்டது. எனவே அடுத்த ஆண்டு முதல் அச்சிடுவது நிறுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இஸ்ரேல் - பாலஸ்தீன தலைவர்கள் வோஷிங்டனில் பேச்சுவார்த்தை



இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன தலைவர்கள் கடந்த இரண்டு வருடங்களின் பின்னர் வோஷிங்டனில் ,நேரடிப் பேச்சுவார்த்தையொன்றில் பங்குபற்றியுள்ளனர்.

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யகு, பாலஸ்தீனத் தலைவர் முஹம்மது அப்பாஸ் ஆகியோருக்கு இடையிலான பேச்சுவார்த்தை ஆக்கபூர்வமாக அமைந்ததாக மத்திய கிழக்கிற்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார்.

இரு தரப்பினரும் இரு வாரங்களில் மீண்டும் மத்திய கிழக்கில் சந்தித்து பேச்சுவார்த்தையொன்றில் ஈடுபடுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டன் இரு நாடுகளுக்கும் இடையிலான முறுகலை முடிவுக்கு கொண்டு வருவதற்கு இதுவொரு சிறந்த சந்தர்ப்பம் எனக் கூறினார்.

இருநாட்டுத் தலைவர்களும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஒரு வருட காலக்கெடு வழங்கியிருந்த நிலையில் இப்பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது. (2)




# காஷ்மீரில் இராணுவத்தினர் குவிப்பா? சீனா திட்டவட்டமாக மறுப்பு

(பீஜிங்)

பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீரில் இராணுவத்தினரைக் குவிக்கவில்லை என சீனா திட்டவட்டமாக மறுத்துள்ளது.

பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள வடக்கு காஷ்மீர், கில்ஜிட்- பால்டிசன் பகுதியில் 11 ஆயிரம் இராணுவத்தினரை சீனா குவித்துள்ளது. இப்பகுதியில் புகையிரதப் பாதை அமைக்கவும் சீனா திட்டமிட்டுள்ளதாக நியூயோர்க்கிலுள்ள ஊடாகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் சீன இராணுவத்தினரை குவிக்கவில்லை என சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் ஜியாங் யூ தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரு நாடுகளான அண்டை நாடு மற்றும் நட்பு நாடு என்கிற முறையில் காஷ்மீர் பிரச்சினையை இந்தியா-பாகிஸ்தான் நாடுகள் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதையே சீனா விரும்புகிறது. வரலாற்று ரீதியாகவே இப்பிரச்சினை பல ஆண்டுகளாக தொடருகிறது.

பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள வடக்கு காஷ்மீரில் சீனா இராணுவத்தைக் குவித்துள்ளது. என்பது வெறும் கற்பனை. இந்தியா , சீனா மற்றும் பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே உள்ள நல்லுறவுகளைச் சிதைக்க வேண்டும் என்கிற நோக்கில் யாரோ வேண்டுமென்றே கதை கட்டிவிட்டுள்ளனர். அவர்களது இந்த உள்நோக்கம் நிறைவேறாது. இந்திய கட்டுப்பாட்டில் உள்ள காஷ்மீர் வாசிகளுக்கு வழங்கப்பட்டு வரும் விசா விவகாரத்தில் எந்த மாற்றமும் இல்லை.

இவ்வாறு ஜியாங் யூ தெரிவித்துள்ளார். இந்திய பகுதியில் உள்ள காஷ்மீர் என சீன செய்தித் தொடர்பாளர் கூறியிருப்பதன் மூலம் பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீரில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மேற் கொண்டு வரும் சீனா அப்பகுதி மக்களை விசா விவகாரத்தில் எப்படி பார்க்கிறது என்பது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. (2)

# புதிய பரிசோதனை மூலம் 2 மணி நேரத்தில் காசநோயை கண்டுபிடிக்க முடியும்

## நிபுணர்கள் நிரூபிப்பு

டி.பி. எனப்படும் காச நோய் மிக கொடிய நோயாகும். இந்த நோய்க் கிருமிகளை கை தேர்ந்த நிபுணர்கள் நுணுக்குக்காட்டி மூலம் மட்டுமே கண்டு பிடித்து வருகின்றனர். இது கடந்த 125 ஆண்டு காலமாக நடைமுறையில் உள்ளது.

தற்போது புதிய கருவிகள் மற்றும் தொழில்நுட்பம் மூலம் காசநோயை கண்டறிய முடியும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நியூ இங்கிலாந்து ஜெர்னல் ஆப் மெடிசின் என்ற நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் காசநோய் என சந்தேகிக்கப்படும் நபர்கள், அந்த நோய்க்கான மருந்து சாப்பிடுபவர்கள் என ஆயிரத்து 730 பேரிடம் 3 விதமான அதிநவீன பரிசோதனைகள் மேற் கொண்டனர்.

எக்ஸ்பர்ட், எம்.டி.பி மற்றும் ஆர்.ஐ.எப் போன்ற பரிசோதனைகள் நடத்தினர். அதன் மூலம் 98 சதவீதம் பேருக்கு காசநோய் உள்ளதா என 2 மணி நேரத்தில் கண்டு பிடித்தனர். (ஸ்ரீ-4-2)

# அவுஸ்திரேலியாவை தவிர்க்கும் இந்திய மாணவர்கள்

அவுஸ்திரேலியாவுக்கு உயர்கல்வி பயிலச் செல்லும் இந்திய மாணவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது.


நிறவெறி காரணமாக இந்திய மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் போக்கு சமீப காலமாக அவுஸ்திரேலியாவில் அதிகரித்து வருகின்றது. இதனால் அவுஸ்திரேலியாவுக்குச் செல்லும் மாணவர்கள் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது.

2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை அவுஸ்திரேலியாவில் உயர் கல்வி பயில 63 ஆயிரத்து 503 இந்திய மாணவர்கள் சென்றனர்.

இது 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டில் 29 ஆயிரத்து 721 ஆக குறைந்து விட்டது. இத்தகவலை அவுஸ்திரேலிய சர்வதேசக் கல்வி சங்கத்தின் தலைவர் ஸ்டீபன் கானலி தெரிவித்தார். (2)

# ஷியா பிரிவினர் மீதான தாக்குதலை எதிர்த்து கராச்சியில் கடையடைப்பு

(லாகூர்)




பாகிஸ்தானின் லாகூர் நகரில் ஷியா பிரிவு முஸ்லிம்களின் ஊர்வலத்தில் தற்கொலைப் படையை சேர்ந்தவர்கள் குண்டுகளை வெடிக்கச் செய்ததில் பலியானவர்களின் எண்ணிக்கை 37 ஆக உயர்ந்துள்ளது.

பாகிஸ்தானின் ஷியா பிரிவு முஸ்லிம்களால் புனிதராக கருதப்படும் இமாம் அலியின் நினைவு தினம் கடந்த முதலாம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது.

இதை முன்னிட்டு லாகூரிலும் கராச்சியிலும் கடந்த முதலாம் திகதி பேரணி நடந்தது. லாகூரில் கர்பாலா கமே ஷா இமாம்பர்கா என்ற இடத்தில் நடந்த ஷியா பிரிவினரின் ஊர்வலத்தில் நுழைந்த 3 தற்கொலை படையினர் தங்கள் உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்தனர். இந்தத் தாக்குதலில் 28 பேர் உடல் சிதறி பலியாயினர். சிறுமிகள் மற்றும் பொலிஸார் உட்பட 280 பேர் காயமடைந்து மருத்து வமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களில் ஒன்பது பேர் நேற்று முன் தினம் சிகிச்சை பலனின்றி இறந்தனர். இதன் மூலம் பலியானவர்களின் எண்ணிக்கை 37 ஆக உயர்ந்துள்ளது.


இந்தத் தாக்குதலுக்கு லஷ்கர் , ஜாங்வி அல் அல்மி என்ற அமைப் பும் பாகிஸ்தானிய தலிபான் அமைப்பும் பொறுப்பேற்றுள்ளன. ஷியா பிரிவினர் மீது நடத்தப்பட்ட தாக்குதலை கண்டித்து நேற்று முன்தினம் லாகூரிலும் , கராச்சியிலும் கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. வன்முறை ஏற்படுவதை தடுக்க கூடுதல் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)



வோஷிங்டனில் வெள்ளை மாளிகையில் நடைபெற்ற மத்திய கிழக்கு நாடுகளின் (இஸ்ரேல்-பாலஸ்தீனம்) அமைதி பேச்சுவார்த்தை குறித்து பாலஸ்தீன ஜனாதிபதி முகமது அப்பாஸ் பேசுவதை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு (இடமிருந்து) ஜோர்டான் மன்னர் 2 ஆம் அப்துல்லா, எகிப்து அதிபர் ஹோஸ்னி முபாரக் மற்றும் அமெரிக்க அதிபர் ஒபாமா ஆகியோர் கவனிக்கின்றனர்.

# மருத்துவரின் இசைப்பயணம்

## கலைமாமணி டாக்டர் சீர்காழி ஜி.சிவசிதம்பரத்துடன் ஓர் சந்திப்பு



'நீ யாரையும் பின்பற்றாதே; என்னையும் தான். உனக் கென்றொரு தனிப்பாணியில் இசையை வழங்கு' இது கலைமாணி டாக்டர் சீர்காழி ஜி.சிவசி தம்பரத்துக்கு அவரது தந்தை சீர்காழி கோவிந்தரா ஜன் கூறியது.

இசைமணி பத்ப ஸ்ரீ டாக்டர் சீர்காழி கோவிந்த ராஜனின் புதல்வன் கலைமாமணி டாக்டர் சீர்காழி ஜி.சிவசிதம்பரம் வீரகேசரி பத்திரிகை நிறுவனத் தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இசைநிகழ்வு ஒன்றை வழங்குவதற்கு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந் தார்.

அவரின் தமிழ் இசைப் பயணம் தொடர்பில் கருத் துரை கேட்க சந்தித்தோம். யாழ்ப்பாணத்துக்கு சென்று இசை நிகழ்ச்சி ஒன்றை வழங்க வேண்டும் என எனது

## வன்னி அழிவுகளின் வடுக்களை ஒருபோதும் மறைக்க முடியாது

தந்தையார் காலத் திலிருந்தே பெருஅவா. எனது தந் தையாருடன் கொழும்பு, மட்டக்களப்பிற்கு சென்று இசை நிகழ்வுகளை வழங்கியுள்ளேன்.

தற்போது யாழ்ப்பாணத்துக்கு வரும் சந்தர்ப்பம் கிடைத்தமையை இட்டு பெரும் மகிழ்ச்சியடைகின் றேன். யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் வழங்கிய தமிழ் இசை நிகழ்ச்சியை மக்கள் அமைதியாக இருந்து இரசனை யுடன் மகிழ்ச்சியுடன் கேட்டமையையிட்டு நெகிழ்ச்சி யடைந்தேன்.

### குருகுலக் கல்வி

எனது இசைப்பயணத்தை குருகுலத்தில் தந்தை யாரிடம் கற்றுக்கொண்டேன். அப்போது எனது தந்தை ஒன்றை கற்றுத் தந்தார். 'நீ யாரையும் பின் பற்றாதே; என்னையும் தான். உனக் கென்றொரு தனிப் பாணியில் இசையைவழங்கு' என்றார்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் மருத்துவ பேரா சிரியராகவும் அரச பொது மருத்துவமனையில் சிறு நீரக மாற்று சிகிச்சை மருத்துவராகவும் கடமையாற்று கின்றேன். அத்துடன் முழு உடல் பரிசோதனை தலை மை மருத்துவராகவும் உள்ளேன்.

இசையும் மருத்துவமும் ஒரே வேலையைத்தான் செய்கின்றது. இரண்டுமே உணர்வுகளை மாற்று கின்றது. நோய்களை குணப்படுத்துகின்றது. எனவே இரண்டுமே சமூகப்பணி என்பதால் இரண்டையும் ஒரேவேளையில் என்னால் செய்ய முடிகின்றது.

எனது தாத்தா சிவசிதம்பரம் வணிகர். மிட்டாய்க் கடை வியாபாரம் செய்தவர். அத்துடன் ஆலயங்களில் இசை நாடகங்களையும் தாத்தா வழங்கிவந்தார். அப்பாவின் சித்தப்பா இசைத்துறையில் ஈடுபாடுள்ள வர் அந்த வேளையில் தான் இசை நாடகங்களில் குழந்தை இராமனுக்கு நடித்துவந்த எனது தந்தையார் இசைமணி சீர்காழிகோவிந்தராஜன் இசைத்துறையில் ஆர்வம் கொண்டார்.

சீர்காழி சட்டநாதர் கோவிலில் இசை பயின்றார். அதன் பின் இசை மணி சீர்காழி கோவிந்தராஜனின் புகழ் செழித்தது. தந்தையின் இசை ஞானம் என்னை போன்ற பலருக்கு வாழ்வளிக்கின்றது.

மரபு இசை போற்றப்பட்டு வருகிறது. திருமுறை களை வேறு இசையில் பாடுவதை மக்கள் ஏற்றுக் கொள்வதில்லை. எனவே தான் மரபு இசை மழுங் காமல் இருக்கின்றது. திரை இசை தடம்மாறி விட்டது. திறமையான இசையமைப்பாளர் குரலுக்கு ஏற்ற வகையில் இசையமைப்பார். தயாரிப்பாளர் கதையோடு இணைந்து பாடல் அமைப்பார். ஆனால் இப் போது அவ்வாறு ஒன்றுமில்லை.

வெற்றி பெறும் திரைப்படங்களின் பாடல்களில் கருத் திருக்க வேண்டும் எனது தந்தையாரின் காலத் தில் திரை இசை பாடல்களில் இலக்கிய சுவை, தமிழ்ச் செறிவு, கருத்துச் செறிவு இருந்தமை கண்கூடு.

இப்போது பின்னணிப் பாடல்களில் பலதரப் பட்டவர்களின் குரல்கள் அர்த்தமற்ற கருத்துக் களு டன் வருகின்றது. தனிப்பட்டவரின் குரலைக கண்டு பிடிக்க முடியாது. இது சீர்காழி பாடியதா? ரி.எம்.எஸ். பாடியதா?, சுசிலா பாடியதா? என தனித்துவத்தை உணரக் கூடிய குரல் வளம் போன்ற விடயங்கள் தற் கால சினிமாவில் இல்லை.

அமெரிக்காவில், அவுஸ்திரேலியாவில் கூட்ட மாக நின்று மக்கள் சீடி வாங்குகிறார்கள் என்றால்




தற்போதைய திரை இசை பாடல்களுக்கு வெற்றி என்று அர்த்தமா? புலம்பெயர் மக்கள் எமது தமிழை காப்பாற்ற வேண்டும் என்பதற் காகவே அவ்வாறு செய்கின்றனர். கர்நாடக சங்கீதம் பூம்புகார் நாடக இசையாகும். சிலப்பதிகாரத் திலும் கர்நாடக சங் கீதம் வருகிறது.

ஏனைய வற்றை விட சிலப்பதிகாரம் கர்நாடக சங்கீ தத்தின் வளர்ச்சிக்கு அபரிமிதமான பங்களிப்பை வழங்கியுள்ளது.

### கலைகளின் தாய்நாடு தமிழ் நாடே!

இந்தியாவின் தமிழ் நாடு கலைகளின் தாய்நாடு. அத்தனை கலைஞர்களையும் அரவணைப்பது தமிழ் நாடு. பாலமுரளி கிருஷ்ணா, ஜேசுதாஸ், சித்ரா என பலதரப்பட்ட மாநிலங்களிலிருந்து வருபவர்களை அரவணைத்து வளர்த்தெடுத்தது தமிழ்நாடு.

நான் வழங்கிய அனைத்து இசை நிகழ்ச்சிகளை யும் மறக்க முடியாது. இரசியர்கள் பேராதரவுடன் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் மறக்க முடியாதது.

தமிழ் குடியில் பிறந்தவன் தமிழ் நாட்டில் இசைத்தமிழனின் மகன் என்பதால் நான் தமிழில் தான் பேசுவேன்.

வாரியார், குன்றக்குடிகளாரின் சொற்பொழி வுகளை பார்த்து அதில் ஒரு நாட்டம் கொண்டு திருக் குறள் அனைத்தையும் படித்தேன்.

திருக்குறள் நமது வாழ்க்கைக்கு தேவையான அனைத்தும் அழகாகப் பொருள் கொண்டுள்ளது. தேன் மதுர தமிழ் ஓசை உலகமெல்லாம் பரவ வேண் டும் என பாரதியார் பாடினார். தெருவெல்லாம் தமிழ் முழக்கம் போட்டார்.

காலச்சுவட்டில் தமிழ் இசை வாயிலாக நமது தமிழ் தொண்டை செய்கின்றேன். சிறியவனான எனக்கு கிடைத்த வாழ்நாள் பாக்கியம் இது.

திருஞான சம்பந்தர் பிறந்த சீர்காழியில் இசை மணிசீர்காழிகோவிந்தராஜனை பின்பற்றி அவரின் நினைவலைகளை பின்பற்றி தமிழ் இசையை கம் பீரமாக மேற்கொண்டு வருகின்றேன்.

நான் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் வழியில் வன்னி பேரழிவுகளை அவதானித்து மனம் வருந்தினேன். ஒன்றைக் கூறுகிறேன். என்ன தான் திரைபோட்டு மூடிமறைத்தாலும் வன்னி அழிவு களின் வடுக்களை ஒரு போதும் மறைக்க முடியாது. ஆனால் அவை அரசியல் பிரச்சினையாக்கப்பட்டுள்ளது.

செவ்வி
ஆர்.யூ.பாலமுருகன்

## அரசியல் அமைப்புத் திருத்தம்....

அரசியல் அமைப்புத் திருத்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை ஆராய்ந்த பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்படும் என மாவை. சேனாதிராஜா கூறியுள்ளார்.

அதேவேளை தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுப்பது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் எவ்வாறாயினும் அரசியல் அமைப்புத் திருத்தம் தொடர்பான தீர்மானம் ஒன்றை இன்னும் மேற்கொள்ளாததால் அது குறித்து மேலதிகமான எதனையும் கூற முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகள் அரசியல் அமைப்புத் திருத்த சட்டமூலத்தை எதிர்ப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் கூட்டணியில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளும் ஏக மனதான தீர்மானத்தை எடுத்திருப்பதாக ஆளும் கட்சியின் கொறடாவும் அமைச்சருமான தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தல் முறை சீர்திருத்தம் உள்ளிட்ட மேலும் சில அரசியல் அமைப்புத் திருத்தங்கள் வரும் காலத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அத்துடன் எதிர்காலத்தில் சட்டத்தினால் மாற்றம் ஏற்படக் கூடிய வேலைத் திட்டங்களையும் அரசாங்கம் முன்வைக்கத் திட்டமிட்டுள்ளது.

எதிர்வரும் 7 ஆம் திகதி அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான யோசனை நிறைவேற்றப்பட்ட பின்னர் 8 ஆம் திகதி உத்தேச அரசியல் அமைப்புத் திட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

மக்கள் வழங்கிய மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத்தை மக்களுக்காகப் பயன்படுத்த அரசாங்கம் முனைப்புக்களை மேற்கொண்டு வருவதாகவும் தினேஸ் குணவர்த்தன கூறியுள்ளார். (ச-5)

## ஹரே கிருஷ்ணா ஆலயத்தில் தீ

இங்கிலாந்தின் லெயஸ்டஷயர் பிராந்தியத்தில் உள்ள ஹரே கிருஷ்ணா ஆலயத்தில் வெடிப்புச் சம்பவம் ஒன்றுடன் பாரிய தீ பரவ ஆரம்பித்ததாகத் தீயணைப்புத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆலயத்திற்குள் பலர் சிக்கியிருப்பதாகவும் லெயஸ்டஷயர் தீயணைப்புத் துறையினர் மேலும் கூறியுள்ளனர். அவர்கள் மோப்ப நாய்கள் சகிதம் தேடுதல்களில் ஈடுபட்டனர். கட்டடத்தின் மூன்றில் ஒரு பகுதி சேதமடைந்துள்ளது. (ச-5)

## புகலிடம்...

ஏனைய சிறைக் கைதிகளாலும் அடிக்கப்பட்டும் தாக்கப்பட்டும் சித்திரவதை செய்யப்பட்டும் இருக்கின்றார்கள் என்றும் இவர்களின் உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்றும் சபை குறிப்பிட்டுள்ளது.

இவர்களுக்கு நேர்ந்திருக்கும் கொடுமைகளுக்கு அவுஸ்திரேலியாவும் இலங்கையுமே பொறுப்பாளிகள் என்றும் அது சுட்டிக்காட்டியுள்ளது. அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு நாட்டுக்குத் திருப்பியனுப்பப்படும் இலங்கையர்களின் உயிரைப் பாதுகாக்க வேண்டியது இலங்கை அரசின் கடமை என்றும் வலியுறுத்தியுள்ளது. (ச-5)

## அரசியல் அமைப்புத் திருத்த...

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி அரசியல் அமைப்புத் திருத்தங்கள் தொடர்பாக புலம்பிய போதிலும் அதற்கு எதிராக ஊடகவியலாளர் சந்திப்பொன்றை மாத்திரமே நடத்தியது.

யானைச் சின்னத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்ட சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் முடிந்தால் இந்தத் திருத்தத்திற்கு எதிராக வாக்களிக்குமாறு தான் சவால் விடுப்பதாகவும் ரில்வின் சில்வா தெரிவித்தார். (ச-5)

## இலங்கை வருகிறார்...

இலங்கை வந்து திரும்பியுள்ள நிலையில் இந்திய இராணுவத் தலைமைத் தளபதியின் இந்தப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

இந்தப் பயணத்தின் போது இந்தியா - இலங்கையிடையே பல்வேறு இராணுவ ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படும் என தெரிகின்றது.

செப்ரெம்பர் மாதத்தில் மட்டுமே இந்தியாவிலிருந்து வெவ்வேறு துறைகளில் உயரிய பொறுப்புக்களை வகிக்கும் ஐந்து பிரதிநிதிகள் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் தொடர்ச்சியாக இலங்கையில் 2 புதிய தூதரக அலுவலகத்தைத் திறப்பதற்காக வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா அடுத்த மாதம் கொழும்புக்கு வர இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இராசபாதையில்...

நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது.

ஆட்டோ ஒன்றினை முந்துவதற்கு மோட்டார் சைக்கிளில் சென்றவர்கள் முயன்ற போதே இச் சம்பவம் இடம்பெற்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர்களில் குமரேஸ் நிர்மலன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் படுகாயமடைந்த மற்றைய இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (ச-5)

## வெளிவிவகார...

கருணாநாயக்க, லக்ஷ்மன் கிரியெல்ல, ஜோன் அமரதுங்க மற்றும் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோர் இந்தப் பிரேரணையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்மானத்திற்கு அமைய இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதாக ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனால் ஏனைய கட்சிகளிடம் இதற்காக ஆதரவு கோரப்படவில்லை. அமைச்சர் ஜி.எல். பீரிஸுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது.

சவுதி அரேபியாவில் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட பெண் தொடர்பான விடயங்களில் அமைச்சர் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாக அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார். (ச-5)


பொருளியற் கல்லூரி

யாழ்.நகர் ⟷ இணுவில்

இரு இடங்களிலும்

குறுகிய காலத்தில் ஆங்கிலப் புலமையைப் பெற்றிட விசேட ஆங்கில கற்கை நெறி ஆரம்பம் → 04.09.2010 சனி

SPOKEN ENGLISH WITH GRAMMAR

Lectures by: Mr.K.Nishanthan (Dip.In Eng.)

யாழ்.நகரில்:-
❖ பிரிவு I:- A+ 1.00pm (சனி, ஞாயிறு) பிரிவு:II:- A+ 3.00pm (சனி, ஞாயிறு)

இணுவிலில்
❖ பிரிவு I:- A+ 8.00am (சனி, ஞாயிறு) பிரிவு:II:- A+ 4.30pm (வியாழன், வெள்ளி)

பாரதி-சித்தன்கேணியில்

சனி, ஞாயிறு - 4.30 pm

❖ கணனி மூலமான பேச்சு வழிகாட்டலுடன் அச்சடித்த பாடக் குறிப்புக்களும் வழங்கப்படும். விரும்பிய இடங்களில் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

(1004) - Director

உயர் கல்வி? தொழில்? கவலையை விடுங்கள்.
நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.
Skill migration, Career guidance
Free Courses BCS-UK, English, Hardware, ICDL
BIT, CIMA, CCNA, Toefl, CIW
Network Software Engineering
ICTA Scholarship
Salary Scale more than 50,000$
www.payscale.com
MCS Supported By UNDP/JRRP
புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும்
324, Palaly Road, Jaffna. Parameswara Junction,
SMS your name & course to 0772 395 895
Don't miss Closing Date 05.09.2010

கிறிஸ்ரல் சென்ரர்
நெல்லியடி
மீண்டும் உங்கள் ஆசிரியர்
Spoken English
ஆரம்பம்: 05.09.2010
முற்பகல் 10.30 மணி
By: S.சடகோபன்
(திங்கள் நண்பகல் 12 மணிக்கு)
(c-1003)

PCST PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD

நம்ப முடியாத விலைகள்!!!
என்றும் எதிர்பாராத அதிரடி விலைக் கழிவு
(இன்னும் 6 நாட்கள் மட்டுமே உள்ளன)

PCST 1: Intel Dual Core 2.7Ghz, Intel Chipset Mother Board, 250GB Harddisk, Kingston 1GB Ram, DVD Writer, Atx Casing, 19' LCD Monitor, DCP UPS, Keyboard, Mouse, Speaker — 3 Years Warranty — 47250/=

PCST 2: Intel Dual Core 2.7Ghz, Intel Chipset Mother Board, 500GB Harddisk, Kingston 2GB Ram, DVD Writer, Atx Casing, 19' LCD Monitor, 650VA UPS, Keyboard, Mouse, Speaker — 3 Years Warranty — 50750/=

PCST 3: Intel Dual Core 2.8Ghz, Intel Chipset Mother Board, 250GB Harddisk, Kingston 1GB Ram, DVD Writer, Atx Casing, 19' LCD Monitor, DCP UPS, Keyboard, Mouse, Speaker — 3 Years Warranty — 47800/=

PCST 4: Intel Dual Core 2.8Ghz, Intel Chipset Mother Board, 250GB Harddisk, Kingston 2GB Ram, DVD Writer, Atx Casing, 19' LCD Monitor, DCP UPS, Keyboard, Mouse, Speaker — 3 Years Warranty — 51250/=

PCST 5: Intel Core 2 Dou 2.93Ghz, Intel G41 Mother Board, 500GB Harddisk, Kingston 2GB Ram, DVD Writer, Atx Casing, 19' LCD Monitor, 650VA UPS, Keyboard, Mouse, Speaker — 3 Years Warranty — 59000/=

Dialog
எல்லையற்ற இணையம் மாதாந்தம் 690/= மட்டுமே!
3.5 Mbps High Speed Broadband Available

| | |
|---|---|
| Dongle 7.2Mbps | -6300/= |
| Web cam | -1100/= |
| UPS DCP | -4300/= |
| UPS Prolink | -4500/= |
| Keyboard | -600/= |
| Mouse | -400/= |
| Headphone | -850/= |
| Router Single Port D.Link | -5000/= |
| Prolink Net Book | -44000/= |
| Printer HP 1102 Laserjet | -15800/= |
| Printer HP Inkjet 1660 | -4750/= |
| Printer Epson Inkjet T10 | -4900/= |

PROLINK Atom Netbook — 1 Year Warranty
விசேட விலைக்கழிவு 44000/= மட்டுமே!

M.M.V Road, Nelliady. T.P: 021 226 4999
305, Kasthuriyar Road, Jaffna. T.P: 021 222 1101, 021 222 9644 E.Mail: pcsjaffna@sltnet.lk
No:5, Kanakapuram Road, Kilinochchi. T.P: 021 228 5360


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.